விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 211 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 02 செவ்வாய்க்கிழமை (18.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


## யாழ்.நாவாந்துறை பகுதியில் இரு குழுக்களிடையே மோதல்

### பொலிஸ், விசேட அதிரடிப் படை குவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நாவாந் துறை பகுதியில் நேற்றிரவு இரண்டு குழுக்களுக்கிடை யில் ஏற்பட்ட மோதல் காரணமாக பதற்ற 16

## சைவ வழிபாட்டு உரிமை குருந்தூரில் மறுப்பு

### மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - தண்ணி முறிப்பு குருந்தூர்மலையில் கடந்த 14.07.2023 அன்று சைவ வழிபாட்டு உரிமை மறுக்கப் பட்டமை மற்றும் ஊடகவியலா ளர் அச்சுறுத்தப்பட்டமை தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடொன்று மேற்கொள் ளப்பட்டுள்ளது.


குறித்த முறைப்பாடானது முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப் 15

# சமஷ்டியே தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக அமைய முடியும்

### அமெரிக்கத் தூதுவரிடம் தமிழ்ப் பிரதிநிதிகள்

(கொழும்பு)

**தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக சமஷ்டியே அமைய முடியும் என அமெரிக்க தூதுவரிடம் தெரிவித்துள்ள தமிழ் மக்களின் பிரதிநிதிகள், தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்ந்து பறிக்கப்படுவதாக சுட்டிக்காட்டி யுள்ளனர்.**



வடக்குக்கிழக்கு மாகாணங் களை பிரதிநிதித்துவப்படுத் தும் கட்சியின் தலைவர்களை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் நேற்று தனது இல்லத்தில் வைத்து சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் 15

## கிளிநொச்சியில் கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஊற்றுப்புலம் பகுதியில் கிணற்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட் கப்பட்டுள்ளது.

நேற்று இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் அதே 15

## 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த ரணிலுக்கு அழுத்தம் கொடுங்கள்

### வடக்குக் கிழக்கு சிவில் சமூக பிரதிநிதிகள் பாரத பிரதமர் மோடிக்கு கடிதம்



(யாழ்ப்பாணம்)

இந்தியாவிற்கு பயணம் மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் 13வது திருத்தச் சட்டத்தினை நடைமுறைப் படுத்த அழுத்தம் கொடுக்க கோரி வட 15

## பருத்தித்துறை கடற்பரப்பில்

### ஆணின் சடலம் மீட்பு

(கரணவாய்)

பருத்தித்துறை துறைமுக கடலில் இருந்து அடையாளம் காணப்படாத ஆண் ஒருவரின் சடலம் நேற்று திங்கட்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது.

சடலம் காணப் பட்டமை தொடர்பில் 15

## 29 ஆயிரம் ஏக்கர் காணி முல்லையில் விடுவிக்கப்படலாம்

### விரைவில் உத்தியோகபூர்வ அறிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத் தில் வனவள திணைக்களத் தினால் எல்லை நிர்ணயம் செய்யப்பட்ட 29,000 ஏக்கர் காணிகளை விடுவித்து மக் களிடம் கையளிக்குமாறு ஜனாதிபதிசெயலகம்அனைத்து தரப்பினருக்கும் அறிவித்தல் விடுத்துள்ளது.

முல்லைத்தீவு மாகாண காரியாலயத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில், வனத்துறை, மகா 15

## திருமணமாகி 4 மாதங்களில் இளம் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

திருமணமாகி நான்கு மாதங்களேயான நிலையில் உடல் சுகயீனம் ஏற்பட்டு இளம்குடும்பப்பெண் ஒருவர் உயிரிழந் 16

## கடன் மறுசீரமைப்பு விரைவில் நிறைவடையும்

### இலங்கை தொடர்பில் அமெரிக்க திறைசேரி செயலாளர்

(கொழும்பு)

இலங்கை மற்றும் கானா வுக்கான கடன் மறுசீரமைப்பு விரைவில் நிறைவடையக் கூடும் என தாம் நம்புவதாக அமெரிக்க திறைசேரி செய லாளர் ஜெனட் யெலன் தெரி வித்துள்ளார்.

இதன்படி, சர்வ தேச நாணய நிதியத் 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



வேலணை மத்திய கல்லூரிக்கு சைவ சமயம் சார்ந்த அதிபர் ஒருவரை நியமிக்குமாறு கோரி கல்லூரியின் பழைய மாணவர்கள் நேற்று மதியம் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.
கவனயீர்ப்பில் ஈடுபட்டவர்களை படத்தில் காணலாம்.

# தீவகத்தில் விசாரணைக்குச் சென்ற கல்வி அதிகாரிகள் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவக் வலய பாடசாலை ஒன்றில் அதிபரினால் மாணவி ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக நேற்றுக் காலை பாடசாலையில் விசாரணை களை நடத்தச் சென்ற கல்வி அதிகாரிகள் மீது தாக்குதல் நடத் தப்பட்டுள்ளது.

தீவகப் பகுதியில் உள்ள பாட சாலை ஒன்றில் கடந்த புதன் கிழமை தரம் 4ல் கல்வி கற்கும் மாணவி ஒருவர் மீது பாடசாலை அதிபர் தாக்கியதாக பெற்றோரி னால் குற்றம் சாட்டப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் நேற்று முன்தினம் குறித்த அதிபர் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் நேற்றுக் காலை தீவக கோட்டக் கல்வி அதிகாரிகள் சிலர் பாடசாலையில் விசாரணைகளை மேற்கொள்ள சென்றிருந்த நிலையில் அங்கு கூடி இருந்த பொதுமக்கள் கல்வி அதிகாரிகள் மீது தாக்குதல் நடத் தியுள்ளதாக தெரியவருகிறது.

சம்பவம் தொடர்பாக ஊர்காவற் றுறை பொலிஸாருக்கு வழங்கப் பட்ட தகவல் அடிப்படையில் பொலி ஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர். (ம-7.33)

யாழ்.போதனாவில் அதிரடிச்சோதனை

# சாராய போத்தல்கள், கள்ளு, போதை பாக்குகள் மீட்பு

யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெறும் நோயாளிகளை பார்வையிட வந்தவர்களிடமிருந்து சாராய போத்தல்கள், கள்ளு மற்றும் போதைப் பாக்குகள் மீட்கப்பட் டுள்ளதாக போதனா வைத்தி யசாலையின் பணிப்பாளர் வைத் திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நோயாளி களை பார்வையிட வந்தவர்க ளின் பைகள், கைப்பைகள் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போதே மேற்படி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பணிப்பாளர் தெரிவிக்கையில், மருத்துவ மனைக்குள் போதைப் பொருட் கள் பாவனை இடம்பெறுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடு களுக்கு அமைய மருத்துவ மனைக்குள் நுழையும் நோயா ளர்கள், மற்றும் நோயாளர் களை பார்வையிட வருவோர் என அனைவரினதும், பொதி கள், கைப்பைகள் பாதுகாப்பு உத் தியோகத்தர்களால் திடீர் சோத னைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது 3 சாராயப் போத் தல்கள்; போதைப் பாக்கு, வெற்றி லைக்கூறுஎன்பனமீட்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது நோயா ளர்களை பராமரிப்பவர்கள் சில ரும் போதைக்கு அடிமையான வர்களாக அடையாளம் காணப் பட்டுள்ளனர். இந்நிலையில் போதைப் பொருளுடன் தொடர் புடைய நபர்களின் செயற்பாடுகள் குறித்து எதிர்காலத்தில் கடுமை யான நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன.

இது குறித்து பொலிஸாருட னும் கலந்துரையாடி வருவதாக தெரிவித்த பணிப்பாளர் வைத் திய கலாநிதி த.சத்திய மூர்த்தி நோயாளிகளின் நிலையை கருத்தில் கொண்டு சகலரும் பொறுப் புடன் செயல்பட வேண் டும் என்றார். (ம-7)

# இரும்புக்கம்பி விழுந்ததில் பெண் சிப்பாய் காயம்

(கரணவாய்)

கற்கோவளம் இராணுவ முகா மில் திருத்த வேலையில் ஈடுபட் டிருந்த பெண் சிப்பாய் ஒருவர் இரும்புக் கம்பி தலையில் விழுந் ததில் படுகாயங்களுக்கு உள்ளாகி யுள்ளார்.

இதில் பலாலி இராணுவ முகா மில் கடமையாற்றும் மகியங்க ணைப் பகுதியை சேர்ந்த பிர்யூ. எம்.எஸ்.எம். விஜயசிங்க என்ற பெண் சிப்பாயே படுகாயமடைந் துள்ளார்.

பலாலி இராணுவ முகாமில் கடமையாற்றும் அவர் கற்கோ வளம் இராணுவ முகாமில் நேற்று நண்பகல் திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த போது கட்டடத்தில் இருந்த இரும்பு கம்பி அவரின் தலை மீது விழுந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இதில் படுகாயங்களுக்கு உள் ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (ம-7.60)

# குளவி கொட்டு பெண் உயிரிழப்பு

(கொழும்பு)

லிந்துலை - பம்பர கலை தோட்டத்தில் குளவி கொட்டுக்கு இலக்காகி வயோ திபப் பெண் ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

பம்பரகலை மத்திய பிரிவைச் சேர்ந்த 80 வயதான வயோதிப் பெண்ணொருவரே உயிரிழந்த தாக பொலிஸார் தெரிவித்தனர். ஓய்வு பெற்ற நிலையில், வீட்டிலி ருந்த அவர், நாட் சம்பள அடிப் படையில் தேயிலை தோட்டத் தில் பணியில் ஈடுபட்டிருந்தார்.

இந்நிலையில் வழமை போல நேற்றய தினம் கொழுந்து பறித்து கொண்டிருந்த போதே அவர் குள விக் கொட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இதனையடுத்து உடன டியாக லிந்துலை பிரதேச வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதி லும் அவர் உயிரிழந்துள் ளார்.

இந்தநிலையில், பிரேத பரி சோதனைக்காக சடலம் நுவ ரெலியா பொது வைத் தியசா லைக்கு கொண்டு செல்லப்பட்டுள் ளதாக பொலிஸார் தெரிவித்த னர். (ம-7)

# மதியத்தின் பின் ஆளுநர் சந்திப்பு

வட மாகாண ஆளுநர் அலு வலக பொதுமக்கள் சந்திப்பு நாளை காலை நடைபெறாதென ஆளுநர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆளுநரின் ஊடக செயலாளர் அனுப்பியுள்ள செய்திக் குறிப் பிலேயே இவ்விடயம் தெரிவிக் கப்பட்டுள்ளது.

பளைப் பகுதியில் பாடசாலை நிகழ்வில் ஆளு நர் அன்று காலை பங்கெடுக்கவுள் ளதாகவும் மதிய த்தின் பின்னர் மக்கள் சந்திப்பு இடம்பெறுமென வும் அறியத்தரப் பட்டுள்ளது.(ம-7)

# யாழ்.பல்கலையின் பட்டமளிப்பை முன்னிட்டு

## ஒருவழிப் பாதை தொடர்பான அறிவிப்பு

யாழ்ப்பாண பல்கலைக்கழ கத்தின் 37 வது பட்ட மளிப்பு விழா நடைபெறும் 19.07.2023 தொடக்கம் 21.07.2023 வரை யான மூன்று தினங்களில் போக் குவரத்து தொடர்பான அசௌகரி யங்களை தவிர்க்கும் பொருட்டு காலை 8.00 தொடக்கம் மாலை 6.00 வரை திருநெல்வேலி சந் தியிலிருந்து கொக்குவில் சந் தியை நோக்கிய ஆடிய பாதம் வீதியின் புகையிரதக் கடவை வரையான பாதை மற்றும் கலட் டிச் சந்தியிலிருந்து இராமநாதன் வீதி பரமேஸ்வரா சந்தி வரை யான பாதை ஆகியன ஒரு வழிப் பாதையாக பேணப்படும் என பதை நல்லூர் பிரதேச சபையின் செய லாளர் யுகராஜா ஜெலீபன் அறிவித்துள்ளார். (ம-7)

# நம்பிக்கையில்லா தீர்மானம் அரசை பலப்படுத்தக்கூடாது

## உதய கம்மன்பில எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்படும் சுகா தார அமைச்சருக்கு எதி ரான நம்பிக்கையில்லாத் தீர்மானமானது, அரசாங் கத்தை பலப்படுத்தும் வகை யில் அமைந்துவிடக்கூடாது என்று பாராளுமன்ற உறுப் பினர் உதய கம்மன்பில வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள் ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில், சுகாதாரத்துறை மீது மட்டுமன்றி, அரசாங்கத் தின் மீதான நம்பிக்கையும் மக்கள் மத்தியில் இன்று இல்லாது போயுள்ளது. அர சாங்கத்திற்குள் இன்று கருத்து வேறுபாடுகள் ஏற் பட்டுள்ளன.

இந்த நிலையில், எதிர்க் கட்சியோ நம்பிக்கையில் லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து, அரசாங் கத்தை மீண்டும் ஒற்று மைப்படுத்தி பலப்படுத்தி விடக்கூடாது.

பாராளுமன்றில் இறுதி யாக இடம்பெற்ற இரண்டு வாக்கெடுப்பிலும் அரசாங் கம்தான் பெரும்பான்மை யுடன் வெற்றி பெற்றது.

எதிர்க்கட்சியில் பலர் இந்த வாக்கெடுப்பிலும் கலந்து கொள்ளவில்லை. இவ்வாறான பின்னணி யில், சுகாதார அமைச்ச ருக்கு எதிராக எதிர்க்கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மா னத்தை கொண்டு வந்தால் அது அரசாங்கத்தைப் பலப் படுத்தும் வகையில் தான் அமையும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)


பாராட்டி வாழ்த்துகின்றோம்




யாழ்.கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவிற்குரிய விளையாட்டு மைதான திறப்பு விழா 16.07.2023 அன்று இடம்பெற்றவேளை மைதானத்திற்குரிய காணியை அன்பளிப்பாக வழங்கிய பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய

கலாநிதி இராசையா குவேந்திரநாதன்

அவர்கள் பாடசாலைச் சமூகத்தினரால்

"தண்ணளி வேந்து"

என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையைப் பாராட்டுவதோடு அவர்களின் சேவை மென்மேலும் தொடர நாமும் அவர்களை வாழ்த்துகின்றோம்.

உரிமையாளரும் ஊழியர்களும்
சீமாட்டி புடவையகம்
இல.129 (122), மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (16316)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தம்புதிய

# Dialog POWER PLAN

## இப்போது பல மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன்



- Data Roll-Over
- பிறருடன் 50GB வரை Data Share
- Unlimited YouTube
- எந்த வலையமைப்பிற்கும் Unlimited Calls
- Smartphoneகளுக்கு பிரத்தியேக விலைக்கழிவு

TRC/D/PRO/22/08

மாதத்திற்கு ரூ. 600/-* எனும் குறைந்த கட்டணத்திலிருந்து உங்களுக்கேற்ற பலதரப்பட்ட planகள்

இன்றே MyDialog App ஊடாக upgrade செய்யுங்கள்

(C-2063)

இலங்கையிலேயே அதிசிறந்த பிற்கொடுப்பனவு Plans

twitter.com/dialoglk facebook.com/dialog.lk

* வரிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது

உங்களுக்கு கொண்டு வருவது
ஆண்டிற்கான தொலைத்தொடர்பு வர்த்தக நாமம்
SLIM KANTAR மக்கள் விருதுகள் 2023

Dialog
எதிர்காலம் இன்றே.

an axiata company www.dialog.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென். மேரிஸ்ஸின் மகுடம் குருநகர் பாடும்மீன் வசமானது



சென்மேரிஸ் வி.க வட மாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 9 நபர் கொண்ட மேரிஸ்ஸின் மகுடம் உதை பந்தாட்ட சுற்றுப் போட்டியின் நேற்று முன்தினம்நடைபெற்ற இறுதிப் போட்டியில் பாடும்மீன் எதிர் ஆனைக் கோட்டை யூனியன் அணி மோதியது. போட்டி ஆரம்பித்ததும் இரு அணிகளும் சிறப்பான ஆரம்ப த்தினை வழங்கியது.

ஆட்டத்தின் முதல்பாதியில் யூனியன் அணியினர் தமது அணிக்கான முதலாவது கோலினை பதிவு செய்தனர். கோல் பதியப்பட்டதும் பாடு ம்மீன் அணி கோல் போட வேண்டும் என்று ஆக்ரோச மாக தமது ஆட்டத்தை ஆடி யது.

ஆனாலும் ஆனைக்கோட் டையூனியன் அணி சிறப்பான தடுப்பாட்டத்தை வழங்கியது. நிமிடத்திற்கு நிமிடம் கோல் பரப்பை ஆக்கிரமித்த போதும் கோல் பெறும் சந்தர்ப்பங்கள் யூனியன் அணியின் பின்கள வீரர்களாலும் தடுக்கப்பட்டு கொண்டிருந்தன. முதல் பாதி யாட்டத்தில் 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகி த்தது ஆனைக்கோட்டை யூனி யன் அணி.

இரண்டாம் பாதியாட்ட ஆரம்பத்தில் இரு அணிகளும் புது உத்வேகத்துடன் ஆடியது. இரு அணிகளும் தமது கள வியூகங்களோடு நேர்த்தியான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

இரண்டாம் பாதியாட்ட ஆரம்பத்தின் முதல் நிமிட த்திலேயே அடுத்த இரண்டா வது கோலினை போட்டு பாடும் மீன் அணிக்கு மீள் அதிர்ச் சியை வழங்கியது யூனியன் அணி .போட்டி யூனியன் அணியின் பக்கமிருக்க பாடும் மீன் அணி கோல் பெற்று விட வேண்டும் என்று ஆக்ரோச மாக ஆடியது வழமை போன்று தமது நுட்பமான பந்து பரி மாற்றத்துடன் ஆட்டத்தினை ஆடி அணிக்காக முதல் கோலினை கீதன் பதிவு செய்ய ஆட்டம் 2-1 கோல் கணக்கில் காணப்பட்டது. இரண்டாம் பாதியில் வெற்றி வேண்டும் என்ற நோக்குடன் ஆடிய பாடும்மீன் அணியானது தமது அபார ஆட்டத்தினை உட்பு குத்தும் வேளையில் யூனியன் அணியின் பின்கள வீரரின் கையில் பந்து பட Hand ball நடுவர் அறிவித்து தண்டனை உதை வழங்க அபிமன்யூ அதனை கோலாக மாற்ற போட்டி பரபரப்பானது. பின்பு இரண்டு அணியும் போராடியும் மேலதிக கோல்கள் இன்றி போட்டி 2-2 என்ற கோல் கணக்கில் நிறைவடைந்தது.

வெற்றியாளரை தீர்மா னிக்கும் சமநிலை தவிர்ப்பு உதையில் கொட்வின் சிறந்த கோல்காப்புடன் 5:4 என்ற் கோல் கணக்கில் வெற்றி பெற்று மேரிஸ்ஸின்மகுடம் வட மாகாண கிண்ணத்தை கைப் பற்றியது குருநகர் பாடும்மீன் அணி. (4-106)



இந்தியாவின் புதுடில்லியில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான பளுதூக்கல் போட்டியில் நேற்று யா/பாஷையூர் சென்.அன்ரனிஸ் றோ.கமகளிர் வித்தியாலய மாணவியான சுகன்யா கனிஷ்ட பிரிவில் 3 ஆம் இடம்பெற்று வெண்கலப் பதக்கமும் சிரேஷ்ட பிரவில் 5 ஆம் இடமும் பெற்று சாதனை புரிந்துள்ளார்.



கீரிமலை சிவானந்தா விளையாட்டுக் கழகம் வலிகாமம் அணிகளிடையே நடத்தும் 7பேர் கொண்ட உதைபந்தாட்ட தொடரின் அரையிறுதிப் போட்டியில் கஜரதன் தலைமை யிலான குப்பிழான் குறிஞ்சிக் குமரன் அணி நவாலி சென்பீற்றர்ஸ் அணியை 5:1 என வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2868

கபிலா

ஸ் அப்பப்பா...காலையில எழுந்திரிச்சா ஒரு மனுஷனுக்கு எவ்வளவு வேலை, பல்லு வெளக்கனும், காபி சாப்பிடனும், டிபன் சாப்பிடனும் மறுபடியும் தூங்கனும்.



எழுந்து மதியானம் சாப்பிடனும் அப்புறம் தூங்கி முழிச்சு உ சாப்பிடனும் அதுக்கு மேல ரெஸ்ட் எடுத்து நைட் சாப்பிடனும்...முடியலடா சாமி...

ஹாலிட்

இன்னிக்கு மீன் செத்தா நாளைக்கு கருவாடு ஆயிரும்...




ஆனா... இன்னிக்கு வெச்ச மீன் குழம்பு நாளைக்கு கருவாடு குழம்பு ஆதுமா?

விசால்


மகிழ்ச்சி என்ற உணர்ச்சி மட்டும் இல்லாவிட்டால்...



வாழ்க்கை என்பது சுமக்க முடியாத பெரிய சுமையாகியிருக்கும்.

விஜி

ஆசிரியர்- காது கேக்காதவனை நாம என்னன்னு சொல்லனும்?
மாணவன்- என்ன வேணாலும் சொல்லலாம் சார்! அவனுக்கு கேக்கவா போகுது!



மிருஷாலி



மகள்- அம்மா எனக்கு நீங்க பாத்த மாப்ள பிடிக்கல அவரோட பல்வரிசை சரி இல்ல..
அம்மா- சும்மா இரும்மா கல்யாணத்துக்கு பின் மாப்ள என்ன சிரிக்கவா போறாரு...

கவிந்தன்

பூக்கடையில பூவெல்லாம் தீர்ந்திடுச்சி இதை ஆங்கிலத்தில் சொல்லுடா....



காலி ப்ளவர் சார்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 11 காரைதீவு வீதியில் அமைந்துள்ள ஆதன இலக்கங்கள் 396, 398 மற்றும் புனிதமரியாள் வீதியில் அமைந்துள்ள ஆதன இலக்கம் 3 என்பன பெயர் மாற்றம் செய்வது தொடர்பான அறிவித்தல். மேற்குறித்த ஆதனங்களில் காரைதீவு வீதியில் அமைந்துள்ள ஆதன இலக்கம் 396 இன் ஆதனப் பெயரானது எமது ஆதனப் பதிவேட்டில் சொந்தக்காரர் என பதியப்பட்டுள்ளது. காரைதீவு வீதியில் உள்ள 398 இன் ஆதனப் பெயரானது மரியாம்பிள்ளை பெண் பூமணி என காணப்படுகின்றது. புனிதமரியாள் வீதியில் அமைந்துள்ள ஆதன இலக்கம் 3 இன் ஆதனப் பெயரானது மடுத்தேசு தம்பிராசா எனக் காணப்படுகின்றது.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு சவரிமுத்து ஆசீர்வாதமும் பெண் மாசிலாமணியும் ஆகியோர் இலக்கம் 398 என்னும் ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு க.அ.வீரபாகு முகதாவில் 1946.06.18 ஆம் திகதி 25212 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் "பாராயடியும் வாடிக்கரையும்" என்னும் பெயருடைய விஸ்தீரணம்.நிலப்பரப்பு ஒன்று அளவு கொண்ட ஆதனத்தை அவர்களது மகளாகிய மடுத்தேசு மரியாம்பிள்ளை பெண் பூமணி என அழைக்கப்படும் திரேசம்மாவிற்கு வழங்கியுள்ளனர். அவர் காலஞ்சென்ற பின்னர் நாவாந்துறை இல 596 காரைநகர் வீதியைச் சேர்ந்த மரியாம்பிள்ளை பொனிபாஸ், மரியாம்பிள்ளை அன்ரனிதாஸ், யோசப் பர்னாந்து பிரான்சிஸ் பெண் சிசிலியா, பொன்னுத்துரை ஈஸ்வரன் பெண் மேரி றோஸ் ஆகியோர் 01.08.2003 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு அருளம்பலம் இராஜரட்ணம் முகதாவில் நிறைவேறிய 1605 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் மேற்படி ஆதனத்தில் விஸ்தீரண நிலப்பரப்பு குளி 5.6 அளவுடைய ஆதனத்தை எலியாஸ் யேசுதாசனுக்கும் பெண் சகாயமலருக்கும் அறுதி விற்றுள்ளனர். எலியாஸ் யேசுதாசனும் சகாயமலரும் 31.01.2010 இல் பிரசித்த நொத்தாரிசு அ.இராசரட்ணம் முகதாவில் 5837 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் அவர்களது மகள் திருமதி ஜெயசுதா சுயந்தகுமார் என்பவருக்கு தங்கள் சீவிய உரித்திற்கமைவாக குளி 5: 6 அளவுடைய ஆதனத்தை நன்கொடையளித்துள்ளார்.

ஆதன இலக்கம் 396 ஆனது வண்ணார்பண்ணை மேற்கைச் சேர்ந்த சவரிமுத்து ஆசீர்வாதமும் பெண் மாசிலாமணியும் பர்னாந்து திரவியமும், பர்னாந்து இராசாவும், இ.பெஞ்சமினும் பெண் அடைக்கலமும் 02.08.1942 இல் பிரசித்த நொத்தாரிசு சு.வீரபாகு முகதாவில் நிறைவேறிய 24398 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் "பாராயடியும் வாடிக்கரையும்" விஸ்தீரண நிலப்பரப்பு நான்கில் தென்மேற்கு பக்கமாக 1/4 பங்கினை மாணிக்கம் சிறில் என்பவருக்கு வழங்கியுள்ளார். இவ்வுறுதியில் 1927 ஆம் ஆண்டு 17047 இல் நிறைவேறிய அறுதி உறுதியால் சவரிமுத்து ஆசீர்வாதத்தினதும் மாசிலாமணியினதும் கொள்விலையும் ஆசீர்வாதம் பெண் மாசிலாமணியின் மரண சாசனமின்றி இறக்க பிள்ளைகளான பர்னாந்து திரவியம், பர்னாந்து இராசா ஆகியோரின் பிதாவழி முதுசமும் ஆக வந்தடைந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் மாணிக்கம் சிறிலின் பேரப்பிள்ளைகளான நாவாந்துறையைச் சேர்ந்த திருமதி ஞானதேவி "வின்சிலோ, செல்வி வினி வின்சிலோ, வின்சிலோ பபிக்குமார் ஆகியோர் 16.07.2010 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு அ. இராஜரட்ணம் முகதாவில் 6462 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிப்படி இவ்வாதனத்தில் விஸ்தீரண நிலப்பரப்பு குளி 5:5 அளவு கொண்ட ஆதனத்தை அவ்வூர் திருமதி ஜெயசுதா சுயந்தகுமார் என்பவருக்கு வழங்கியுள்ளனர்.

நாவாந்துறை காரைதீவு வீதி இல 389 இல் வசிக்கும் திருமதி ஜெயசுதா சுயந்தகுமார் என்பவர் 05.09.2012 ஆம் திகதி 718 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதிப்படுத்தல் (ஒன்றுசேர்த்தல்) உறுதி மூலம் ஆதன இலக்கம் 398,396 ஆகிய இவ் விரு ஆதனங்களையும் 2010.01.31, 16.07.2010 ஆம் திகதியிலும் பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் முறையே 5837, 6462 ஆம் இலக்கங்களில் நிறைவேறிய நன்கொடை அறுதி உறுதிகளின்படி தனது சொந்தமும் ஆட்சியுமானது என்றும் இவ்விரு ஆதனங்களும் ஒன்று சேர்ந்து ஒரே எல்லைக்குள் காணப்படுவதனால் இவ்விரு ஆதனங்களின் விஸ்தீரணம் உறுதிகளின்படி முறையே குளி 5:6,குளி 5:5. இவை இரண்டும் இணைந்து குளி 11.1 ஆக காணப்படுகின்றது. இவ்வாதனம் நிலஅள்வையாளர் கே.நவ்ரட்ணம் அவர்களால் 23.08.2012 இல் அளந்து வரைந்த 1096 ஆம் இலக்க நிலஅளவைப்படத்தில் குளி 10.53 ஆக காணப்படுகின்றது. அதன்பின்னர் இவ்வாதனத்தை திருமதி ஜெயசுதா சுயந்தகுமார் என்பவர் பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் 1747 ஆம் இலக்கத்தில் 11.06.2013 ஆம் திகதி நிறைவேறிய அறுதி உறுதியில் விஸ்தீரண நிலப்பரப்பு குளி 10.53 கிணறும் அதற்கு சேர்ந்தவைகளும் தனக்குப் பின் தனது மகன் இராஜசிறிக்கு சென்றடைய வேண்டும் எனும் நிபந்தனைக்கு அமைய இல 96 கடற்கரை வீதியைச் சேர்ந்த திருமதி மரியமலர் இராஜநாயகம் என்பவருக்கு அறுதி உறுதி நிறைவேற்றியுள்ளார்.

ஆதன இலக்கம் 3 ஆனது நாவாந்துறை கடற்கரை வீதியில் வசிக்கும் நல்லையா தங்கராசா என்பவர் 2006.03.08 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு அருளம்பலம் இராஜரட்ணம் முகதாவில் 3667 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் வண்ணார்பண்ணை தென்மேற்கு இறையில் "பாராயடி" என்னும் பெயரும் விஸ்தீரண நிலப்பரப்பு குளி 4.5 அளவு கொண்ட ஆதனம் தனது பிதா வழிப் பேரன் காலஞ்சென்ற மடுத்தீசு தம்பிராசாவிற்கு 1912 ஆம் ஆண்டிலிருந்து சொந்தமும் ஆட்சியுமாயிருந்து அவர் அடியற்றுக் காலஞ் செல்ல எனது பிதா காலஞ்சென்ற தியோ தம்பிராசாவிற்கு சென்றடைந்து இவர் வழியாக நல்லையா தங்கராசா ஆகிய எனக்கு வந்தடைந்த பிதாவழி முதுசமும் ஆட்சியுமானதாகும் என குறிப்பிட்டுள்ளார்.
அதன்பின்னர் நல்லையா தங்கராசா என்பவர் விஸ்தீரண நிலப்பரப்பு குளி 4.5 அளவு கொண்ட ஆதனத்தை 2010.09.07 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு யோகேஸ்வரி பாலசுப்பிரமணியம் முகதாவில் 2402 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் அதே ஊரைச் சேர்ந்த தனது மகள் பெர்னான்டோ மேரி யோசெப்பினுக்கு நன்கொடையளித்துள்ளார். நாவாந்துறையை சேர்ந்த பெர்னான்டோ மேரி யோசெப்பின் என்பவர் வீஸ்தீரண நிலப்பரப்பு குளி 4.5 அளவு கொண்ட ஆதனத்தை 2014.01.14 இல் பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் நாவலர் வீதி 1 ம் குறுக்குத்தெரு இல 4 ஐ சேர்ந்த திருமதி மரியமலர் இராசநாயகம் என்பவருக்கு நன்கொடையளித்துள்ளார்.

திருமதி மரியமலர் இராசநாயகம் என்பவர் பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் 14.01.2014 ஆம் திகதி 2455 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதிப்படுத்தல் உறுதியில் இலக்கம் 1747, 2454 முறையே அறுதி, நன்கொடை உறுதிகள் மூலம் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எஸ். சுப்பிரமணியம் 2013.06.18 ஆம் திகதி வரைந்த 2406 ஆம் இலக்க நிலஅளவைப்படத்தில் துண்டு 1 எனும் பாகம் விஸ்தீரண நிலப்பரப்பு குளி 14.31 என குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் உறுதிப்படுத்தியுள்ளார்.

இல 96 கடற்கரை வீதி நாவாந்துறையைச் சேர்ந்த இராசநாயகம் இராஜசிறி என்பவர் விஸ்தீரண நிலப்பரப்பு குளி 14.3 அளவு கொண்ட ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு ஸ்ரீ.ஜெயசித்திரா முகதாவில் 11.03.2022 ஆம் திகதி இல 4660 இல் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் இல 225/7 மோதறை கொழும்பு 15 என்னும் முகவரியைச் சேர்ந்த தனது மைத்துனரான பர்னாந்து அருள்தாஸ் என்பவருக்கு நன்கொடையளித்துள்ளார்.

**ஆதன அட்டவணை**

ஆதன இலக்கம் 398, 396, 3 கொண்ட ஆதனங்கள்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை

இது யாழ்ப்பாணம் பிரதேச செயலகப் பகுதியில் யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட J/85 கிராம சேவகர் பிரிவில் உள்ள "பாராயடியும் வாடிக்கரையும்" நிலப்பரப்பு 1 குளி 15.03. இது தற்போது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.சுப்பிரமணியம் அவர்களால் 2013.06.18 ஆம் திகதி 2406 ஆம் இலக்கத்தில் பிரிவிட்டு அளந்த நிலஅளவைப்படத்தில் லொட் என காட்டப்பட்ட பாகம் நிலப்பரப்பு பூச்சியம் குளி பதினான்கு தசம் மூன்று ஒன்று (நிலப்பரப்பு 0, குளி 14.31) அதற்கு சேர்ந்தவைகளும்.இந்த நிலப்பரப்பு 0 குளி 14.31 க்கும் எல்லைகள்.

வடக்கு - யோசப் பிரான்சிஸ் பெண் திஸ்கத்தின் ஆதனமும் இம்மனுவல் ஜீவமலரின் ஆதனமும்

கிழக்கு - சென் மேரிஸ் ஒழுங்கை

மேற்கு -காரைநகர் வீதி

தெற்கு - வாய்க்காலும் காரைநகர் வீதியும் இதனடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை பெர்னான்டோ அருள்தாஸ் என்பவர் தனது பெயரை எமது ஆதனவரிப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது பெர்னான்டோ அருள்தாஸ் என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக் கூடிய எப் பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம். (சி-6932)

## ஸ்ரீ வித்தியா ஹோம ஆராதனை

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் வீணாகான குரு பீடம்பதி உறையும் ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவில் 108 ஹோமகுண்டசகித ஸ்ரீ வித்தியா ஹோம ஆராதனை எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது என குரு முதல்வர் சிவஸ்ரீ சபா வாசுதேவக்குருக்கள் அறிவித்துள்ளார். (4-5)



கரவெட்டி கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட தினக்கூலி வேலை செய்யும் 75 குடும்பங்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களும் பொருட்களும் நேற்று நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டது.
(படம்- மகாலிங்கம்)

## விளாவோடை பாலம் புனரமைப்பு விரைவில்

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்திற்கு உட்பட்ட உமையாள்புரம் விளாவோடை பாலத்தின் புனரமைப்பு பணிகள் விரைவில் ஆரம்பிக்கபடவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது

கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளப்பாதிப்புக்கள் காரணமாக கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்திற்கு உட்பட்ட உமையாள்புரம் விளாவோடை கிராமத்திற்கான பாலம் சேதமடைந்த நிலையில் இராணுவத்தினரால் தற்காலிக புனரமைப்பு செய்யப்பட்டு மக்கள் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

குறித்த பாலமானது ஒவ்வொரு வருடமும் வெள்ள அனர்த்தத்திற்கு உள்ளாகிவந்த நிலையில், கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் இப்பாலத்தினை புனரமைக்குமாறு தொடர்ச்சியான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், தற்போது கிராமிய பாலங்கள் புனரமைத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் குறித்த பாலம் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த செயற்றிட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டினை வீதி அபிவிருத்தி திணைக்களம் கிராமிய பாலங்கள் புனரமைத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் ஒதுக்கியுள்ளதுடன், திட்ட கண்காணிப்பினையும் மேற்கொள்ளவுள்ளது. (4-315)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்று சின்னங்களை பாதுகாக்க தவறின் அழித்து விடுவார்கள்

## கலாநிதி ஆறு.திருமுருகன் எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

தமிழர்களின் வரலாற்று அடையாளச் சின்னங்கள் பறி போய்க் கொண்டிருக்கின்ற சூழலில் அதனைப் பாதுகாக்க வேண்டியது அவசியமென வும் தவறினால் வரலாறுகள் புனையப்பட்டு அழிக்கப்படும் நிலைமை ஏற்படும் என சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி.ஆறு.திரு முருகன் தெரிவித்தார்.

நல்லூர் இராசதானியின் சங்கிலியன் தோரண வாசல் திறப்பு விழா நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. அந்நிக ழ்வில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

நல்லூர் இராசதானியின் சங்கிலியன் தோரண வாசல் புனரமைக்கப்பட்டது போன்று ஏனைய வரலாற்று மரபுரிமைச் சின்னங்களும் புனரமைக்கப் பட்டு அவை அனைத்தும் பாது காக்கப்பட வேண்டும்.

குறிப்பாக இங்குள்ள மந்திரி மனையை அடையாளப்படுத்தி காப்பாற்றுவது போன்று ஏனைய வரலாற்று அடையாளச் சின் னங்களையும் அடையாளப்படு த்த வேண்டும்.

இன்றைக்கு தமிழர்களின் அடையாளச் சின்னங்கள் எல்லாம் பறிபோகிறது. எனவே வரலாற்று அடையாளங்களை நாங்கள் சரியாக போடாவிட்டால் அதை புனைந்து அழிக்க நெருங்கி விடுவார்கள்.

இவ்வாறு எமது பாரம்பரிய வரலாற்று அடையாள சின்ன ங்களைப் பாதுகாக்க யாழ். பல்கலைக்கழக சமூகம் காத்தி ரமான நடவடிக்கைகளை முன் னெடுக்க வேண்டும்.

மேலும் எங்கள் பாரம்பரிய அடையாளங்களை சொல் வதற்கு எம்மவர்களிடத்தே பொறுமை இல்லை. அந்தப் பொறுமையை அனைவரும் வளர்த்துக் கொள்ள வேண் டும் என மேலும் தெரிவித் தார். (4-5-33-104)

# டெங்கு தடுப்பு பணியாளர்கள் நேற்றும் போராட்டம்



(சாவகச்சேரி)

தமது நியமனத்தை நிரந் தரமாக்கக் கோரி வடக்கு மாகாண டெங்கு தடுப்பு உதவி யாளர்கள் நேற்று திங்கட்கி ழமை காலைகைதடியில் அமைந் துள்ள வடக்கு மாகாணசபை முன்பாக கவனயீர்ப்புப் போரா ட்டத்தில் ஈடுபட்டனர்.

7 வருடங்களுக்கு மேலாக நிரந்தர நியமனம் இன்றி 22,000 ரூபாய் கொடுப்பனவி ற்கு பணி புரிந்து வரும் டெங்கு தடுப்பு உதவியாளர்கள், இது வரை அரசாங்கம் தமக்கு வழங்கிய வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தத் தவறிய தாக சுட்டிக்காட்டி கவனயீர்ப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது வடக்கு மாகா ணத்தில் டெங்கு தடுப்பு உத வியாளர்களாக கடமை புரியும் 50 இற்கும் மேற்பட்ட தற்காலிக பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் சம்பவ இடத்திற்கு நேரடியாக வந்து போராட்டத்திற்கு வலு சேர்த்ததுடன் நியமனம் தொட ர்பான மேலதிக முயற்சிகளை மேற்கொள்வதாகவும் உறுதிய ளித்திருந்தார்.

போராட்டத்தின் நிறைவில் டெங்கு தடுப்பு கள உதவியா ளர்களால் வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளருக்கு மகஜர் ஒன்றும் வழங்கி வைக் கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக் கது. (4-5-30)

# வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லை க்குள் அமைந்துள்ள அரியாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இலவச மாக விலங்கு விசர்நோய் தடுப் பூசி எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு அரியாலை சனசமூக நிலையம் புங்கன்குளம் வீதி, மு.ப 11 மணிக்கு பென்ரிகேஸ் லேன், பி.ப 2.30 மணிக்கு தியாகராசா படிப்பகம் கண்டி வீதி அரியாலை, 25 ஆம் திகதி காலை 9 மணி க்கு சரஸ்வதி சனசமூகநிலை யம் கண்டி வீதி அரியாலை, மு.ப 11 மணிக்கு மிருக வைத்திய நிலையம் ஏ.வி. றோட் அரி யாலை, பி.ப 2.30 மணிக்கு பிரப்பங்குளம் அம்மன் கோவி லடி இலந்தைக்குளம் வீதி, 26 ஆம் திகதி காலை 9 மணிக்கு கலைமகள் சனசமூக நிலையம் அரியாலை, மு.ப 11 மணிக்கு காந்தி சனசமூக நிலையம் அரியாலை, பி.ப2.30 மணிக்கு அருணோதயா சனசமூக நிலை யம் அரியாலை, 27 ஆம் திகதி காலை 9 மணிக்கு திருமகள் சனசமூக நிலையம் அரி யாலை, மு.ப 11 மணிக்கு மலர்ம கள் சனசமூக நிலையம் அரி யாலை, பி.ப 2.30 மணிக்கு பாரதி சனசமூக நிலையம் நாயன்மார் கட்டு செம்மணி வீதி, 28 ஆம் திகதி காலை 9 மணி க்கு அம்பாள் சனசமூக நிலை யம் பேச்சி அம்மன் கோவிலடி, மு.ப 11 மணிக்கு மகேஸ்வரி பாடசாலை அருகில் நாயன்மார் கட்டு, பி.ப 2.30 மணிக்கு கலை வாணி சனசமூக நிலையம் பொன்னம்பலம் வீதி, 31 ஆம் திகதி காலை 9 மணிக்கு முள்ளி வீதி அரியாலை, மு.ப 11 மணி க்கு ஆள்காட்டி வீதி அருளம்ப லம் வீதி சந்தி, பி.ப 2.30 மணிக்குஇராஜேஸ்வரி வீதி அரியாலை, 2 ஆம் திகதி காலை 9 மணிக்கு கனகரட்ணம் வீதி நாவலர் வீதி சந்தி அரி யாலை, மு.ப 11 மணிக்கு கனக ரட்ணம் மகா வித்தியாலயம் அருகில் நாவலர் வீதி, பி.ப 2.30 மணிக்கு பாரதி வீதி முதலியார் வீதி சந்தி அரியாலை, 3 ஆம் திகதி காலை 9 மணிக்கு கச்சேரி நல்லூர் வீதி றக்கா வீதி சந்தி அரியாலை, மு.ப 11 மணி க்கு பேரின்ப நாயகம் வீதி அரி யாலை, பி.ப 2.30 மணிக்கு கச்சேரி நல்லூர் வீதி நாவலர் வீதிச் சந்தி, 4 ஆம் திகதி காலை 9 மணிக்கு சாஸ்திரியார் வீதி அரியாலை, மு.ப 11 மணிக்கு அருளம்பலம்வீதி (சந்தனமாதா ஒழுங்கை), பி.ப 2.30 மணிக்கு கச்சேரி கிழக்கு புகை யிரத பாதை (ஒழுங்கை) ஆகிய இடங்களில் வைத்து ஏற்றுவத ற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியைப் பெற் றுக் கொள்ளுமாறும் அத்துடன் ஓர் நாய்க்கான உரிமக் கட்டண மாக 50 ரூபாய் அறிவிடப்படும் எனவும் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள் ளார். (4)


## அச்சுவேலியில் தற்கொலைக்கு முயன்றவர் பொலிஸாரால் மடக்கிப்பிடிப்பு

(சாவகச்சேரி)

யாழ். அச்சுவேலி பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள காணியில் தனக்குத் தானே பெற்றோலை ஊற்றிக் கொண்டு தற்கொலைக்கு முயன்ற நபரை பொலிஸார் காப்பாற்றியுள்ள னர்.

தன் மகள் தொடர்பில் அயல் வீட்டார் இழிவாக பேசியது தொட ர்பாக பொலிஸார் நடவடிக்கை எடுக்க தவறிவிட்டதாக தெரி வித்து அச்சுவேலி பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள காணியில் தனக்கு தானே பெற் றோலை ஊற்றி தற்கொலை செய்ய முயற்சித்துள்ளார்.

விரைந்து செயற்பட்ட பொலி ஸார் குறித்த நபரை மடக்கிப் பிடி த்து தற்கொலை முயற்சியில் இரு ந்து காப்பாற்றியுள்ளனர். ஆவ ரங்கால் சர்வோதயா பகுதியை சேர்ந்த நபரே இவ்வாறு காப் பாற்றப்பட்டுள்ளார். (4-5-30)



"வாழும் போதே வாழ்த்துவோம்" என்ற தொனிப்பொருளில் 2009 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் கிளிநொச்சி வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் கற்பித்த அதிபர், ஆசிரியர்களுக்கான கௌர விப்பு மற்றும் ஒன்றுகூடல் நிகழ்வு ஆகியன அப்பாடசாலையில் கல்வி கற்ற 2006 ஆம் வருட க.பொ.த சாதாரண தர மாணவர் அணியால் முன்னெடுக்கப்பட்டு அண்மையில் விமர்சையாக கொண்டாடப்பட்டது. (படம்:-சுபேசன்)



கரவெட்டி கமநல சேவைகள் நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வவிநாயகம் திலீப்குமார் பதவி உயர்வு பெற்று கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபையின் உதவி பணிப்பாளராக செல்லும் நிலையில் கரவெட்டி கமநல சேவைகள் நிலையத்தினால் சேவைநலன் பாராட்டு விழா அண்மையில் நடைபெற்றது. (படம்:-மகாலிங்கம்)

# யாழ்ப்பாணம் மலர் 02 இற்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

(அராலி)

யாழ்ப்பாண மாவட்டப்பண்பாட் டுப் பேரவையால் நடத்தப்படும் 2023 ஆம் ஆண்டிற்கான மாவ ட்டப் பண்பாட்டு விழாவில் வெளி யீடு செய்யப்படவுள்ள "யாழ்ப்பா ணம்" மலர் - 02 இற்கான ஆக்கங்கள் கோரப்பட் டுள்ளன.

"யாழ்ப்பாணத்து மொழி வழ க்கும் தமிழிலக்கியமும்" எனும் தொனிப் பொருளை உள்ளட க்கியதாக ஆக்கங்கள் எதிர்பார்க்க ப்படுகின்றது.

5 பக்கங்களுக்கு மேற்படா தவாறு A-4 தாளில் கணனியில் தட்டச்சு செய்து (Font - Baamini, Font Size - 12), gajaffna@sitnet.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு மென் பிரதியாகவும் அதன் வன்பிர தியை நேரடியாகவோ அல்லது பிரதேச செயலக கலாசார உத்தி யோகத்தர் ஊடாகவோ 2023. 08. 31 ஆம் திகதிக்கு முன்னர் "தலைவர், யாழ்ப்பாண மாவட் டப் பண்பாட்டுப் பேரவை, மாவ ட்ட செயலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார். (4-7)

# ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய அலங்கார உற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டச்வீதியில் அமை ந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பழனி ஆண் டவர் ஆலய அலங்கார உற்சவப் பெருவிழா நேற்று திங்கட் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியதுடன் தொடர்ந்து 17 தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 1 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஸ்ரீ பழனி வேல் பவனியும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் வைரவர் சாந்தியும் இடம்பெற வுள்ளன. (4-5-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை வருகை தரும் யுவான் ஜியாஜீன்



(கொழும்பு)

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் அரசியல் குழு உறுப்பினர் யுவான் ஜியா ஜுன் 5 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வரவுள்ளார். அவர் நாளை முதல் எதிர் வரும் 23 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார் என சீனத் தூதரகம் தமது டுவிட்டர் கணக்கில் தெரிவித்துள்ளது.

யுவான் ஜியாஜுன் சீனாவில் சோங் கிங் நகர சபையின் செயலாளராகவும் பணியாற்றுவதுடன் சீன அரசியலில் அவர் முக்கிய பங்கு வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# 50 வீத எரிபொருள் இருப்பு பேணப்படுவது கட்டாயம்

## எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் ஐம்பது வீத எரிபொருள் இருப்புப் பேணப்படுவது கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

இந்த உத்தரவுகளை பின்பற்றாத எரிபொருள் நிரப்பு நிலையங்களை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது கட்டுப்பாட்டின் கீழ் எடுத்துக் கொள்ளும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து 770 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு இதுவரை கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன தெரிவித்தார்.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஐம்பது வீத எரிபொருள் இருப்பை பராமரிக்காது போனால், அவை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தால் கையகப்படுத்தப்படும்.

கொழும்பு, ராஜகிரியவில் இதுவரை விதிகளை பின்பற்றாத எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-5)


## கிருஷ்ணா அடைவுக் கடை

பதிவு இல J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2022 ஆம் ஆண்டு 30.09.2022 இற்கு முன்னர் அடகு வைத்த நகைகள் யாவற்றையும் 2023 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 15 ஆம் திகதி (15.09.2023) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.09.2023 ஆம் திகதியன்று விற்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

**குறிப்பு:** 2022 ஆம் ஆண்டு 09 ஆம் மாதம் 30 ஆம் திகதிக்கு முற்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.

இல.370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
021 490 0311
021 222 5180.

உரிமையாளர்,
இல.09,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5046.

(16293)


# வீழ்ச்சி கண்டுள்ள சீனி உற்பத்தி

(கொழும்பு)

2022ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த அறிக்கையின்படி கடந்த ஆண்டில் இலங்கையில் சீனி உற்பத்தி 2.1 வீதத்தால் குறைந்துள்ளது.

2021 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த சீனி உற்பத்தி 80555 மெட்ரிக் தொன்களாகும். ஆனால் 2022ஆம் ஆண்டில் இலங்கையில் சீனி உற்பத்தி 78,857 மெட்ரிக் தொன்களாக குறைந்துள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கை தெரிவிக்கிறது.

2019 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் சீனி உற்பத்தியானது தொடர்ச்சியாக மேல் நோக்கிச் செல்வதைக் காட்டினாலும், கரும்புச் செய்கைக்கான உரங்களின் பற்றாக்குறையினால் சீனி தொழிற்துறை எதிர் கொண்ட தடைகள் காரணமாக 2022 ஆம் ஆண்டில் சீனி உற்பத்தி குறைந்துள்ளது.

நாட்டின் மொத்த சீனித் தேவையில் சுமார் 15 வீதம் உள்ளூரிலேயே பூர்த்தி செய்யப்படுவதாகவும் எஞ்சிய தேவைகள் இறக்குமதி மூலம் பூர்த்தி செய்யப்படுவதாகவும் மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 RC<br>நட்சத்திரம்: பூரம்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: பட்டதாரி (கனடா) மருந்தாளர்<br>எதிர்பார்ப்பு: ஆங்கில அறிவுடைய படித்த பெண்<br>தொ.இ: B/13831 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 25 1/2<br>உயரம்: 5' 3"<br>தகைமை/தொழில்: BA (Hons)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச உத்தியோகம்<br>தொ.இ:G/13887 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 13 1/2<br>உயரம்: 174 cm<br>தகைமை/தொழில்: Civil Engineer (சிங்கப்பூர்)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச, தனியார் தொழில்<br>தொ.இ: B/13835 | பிறப்பு:1998 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 49<br>உயரம்: 154 cm<br>தகைமை/தொழில்: Junior Excutive (Pvt)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, வெளிநாடு<br>தொ.இ: G/13889 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>உயரம்:5' 2"<br>தகைமை/தொழில்: Assitant Engineer (அரச)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச உத்தியோகம்<br>தொ.இ: B/13839 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்: BA(Hons) Masters<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, வெளிநாடு<br>தொ.இ:G/13893 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>உயரம்:165 Cm<br>தகைமை/தொழில்: A/L sale Rep<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/13845 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 13 1/2<br>உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில்: HND IT(Pvt Company)<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் தொழில், வெளிநாடு<br>தொ.இ:G/13898 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபா


# இலங்கையின் வரி வருவாய் இரு மடங்காக அதிகரிப்பு

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் வரி வருவாய் கணிசமான அளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக உள்நாட்டு இறை வரித்திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஏறத்தாழ இரண்டு மடங்காக அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த ஆண்டின் (2023) முதல் பாதிக்குள் (ஜனவரி - ஜூன்) 696, 946 மில்லியன் ரூபா வரி வசூலிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

இதுவே கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் 361, 832 மில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளது.

இதன் அடிப்படையில் இந்த ஆண்டு வரி வருவாயின் அதிகரிப்பு, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (நி-5)

## சுகாதார அமைச்சருக்கு எதிராக வீதிக்கு இறங்கிய மக்கள்



(கொழும்பு)

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. குறித்த ஆர்ப்பாட்டம் நேற்று சுகாதார அமைச்சுக்கு முன்பாக இடம் பெற்றது. இலங்கையில் கடந்த காலங்களில் தரமற்ற மருந்துகளால் பல்வேறான மரணங்கள் நாடளாவிய ரீதியில் பதிவாகியிருந்தன.

இந்நிலையில் குறித்த மருந்துகளை தடை செய்ய வலியுறுத்தியே ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (நி-5)



நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் வருடாந்த அணிவகுப்பு நிகழ்வு நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி காஞ்சனா விமலா வீர தலைமையில் நேற்று நடைபெற்றது.

(படம்: மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில்
# பள்ளத்தில் பாய்ந்த சுற்றுலா பேருந்து 5 பேர் உயிரிழப்பு,13 பேர் படுகாயம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள கில்கிட் பால்டிஸ்தான் பகுதியில் நேற்று முன்தினம் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதில், 5 பேர் உயிரிழந்துள்ளனர். 13 பேர் படுகாயமடைந்துள்ளனர். டயமர் மாவட்டத்தில் உள்ள தளிச்சி பகுதிக்கு அருகே காரகோரம் நெடுஞ்சாலையில் இந்த விபத்து ஏற்பட்டது. சுற்றுலாப் பயணிகள் 18 பேர் லாகூரில் இருந்து பனி படர்ந்த மலைப் பகுதிக்கு சுற்றுலா சென்ற போது,விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் மூன்று பெண்கள், ஒரு குழந்தை மற்றும் ஒரு ஆண் உட்பட ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர். படுகாயமடைந்த 13 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் விபத்துக்கான காரணத்தை கண்டறியவும் விசாரனை நடத்தவும் பாகிஸ்தான் பிரதமர் ஷேபாஸ் ஷெரீப் உத்தரவிட்டார். (நி-5)

# பெண்ணை தாக்கிய விண்கல் பிரான்ஸில் சம்பவம்

(பாரிஸ்)

பூமியின் வளிமண்டலத்தில் பல நாட்கள் பயணம் செய்து தரையைத் தாக்கும் விண்வெளிப் பாறைகள்தான் விண்கற்கள் எனப்படும். ஒவ்வொரு நாளும் கிட்டத்தட்ட 50 தொன் விண்கற்கள் பூமியில் விழுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மிகவும் அரிதான வானியல் நிகழ்வாக கருதப்படும் ஒரு சம்பவம் பிரான்ஸ் நாட்டில் நடந்திருக்கிறது. சுமார் 10 நாட்களுக்கு முன்பு, அங்கு ஒரு பெண் மொட்டை மாடியில் அமர்ந்து தனது நண்பருடன் பேசிக் கொண்டிருந்திருக்கிறார். திடீரென கூழாங்கல் போன்ற ஒரு பொருள் அவர் விலா எலும்பை தாக்கியிருக்கிறது.

இது குறித்து அப்பெண் தெரிவிக்கையில் பக்கத்து கூரையின் அருகில் "பூம்" என பெரிய சத்தம் கேட்டது. அடுத்த விநாடி என் விலா எலும்பில் ஒரு அதிர்ச்சியை உணர்ந்தேன். என்னை ஒரு வௌவால் தாக்கியது என நினைத்தேன். பிறகு அதை ஒரு சீமெண்ட் துண்டு என்று நினைத்தோம். அது நிறம் எதுவும் இல்லாமல் இருந்தது என அந்த பெண் கூறியிருக்கிறார். தொடர்ந்து அப்பெண் அந்த பொருள் என்ன என தெரிந்து கொள்ள முயற்சித்திருக்கிறார்.

அதில் அது சீமெண்ட்டால் செய்யப்பட்டதல்ல என்றும் அது ஒரு விண்கல் போல் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. தியர்ரி ரெப்மான் எனும் புவியியலாளரிடம் இது குறித்து அவர் கேட்டிருக்கிறார். அதனை பரிசோதித்த ரெப்மான், அது பூமியை சேர்ந்த பொருளல்ல என உறுதிப்படுத்தினார். (நி-5)

# வாக்னர் இராணுவத்துடன் தொடர்பை பேணிய 83 பட்டாலியன்களை கைது செய்த ரஷ்யா

(கீவ்)

வாக்னர் வாடகை இராணுவத்தினருடன் தொடர்புகளை மேற்கொண்டு வந்ததாக கூறி ரஷ்ய இராணுவத்தின் உயரதிகாரிகள் சிலர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரஷ்யாவில் வாக்னர் வாடகை இராணுவத்தினரால் இடம்பெற்ற இராணுவ புரட்சியில் இவர்களுக்கும் பங்கு இருப்பதாக கூறியே குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

கடந்த வருடம் வாக்னர் படையின் இராணுவ புரட்சி நடவடிக்கை குறித்து ரஷ்ய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

அப்படியானால் வாக்னர் படைக்கும் ரஷ்ய இராணுவத்திற்கும் இடையிலான தொடர்பை அந்நாட்டு புலனாய்வு பிரிவு அறிந்து வைத்திருக்கவில்லையா என்ற கேள்வி தற்போது உலக அரங்கில் எழுப்பப்பட்டு வருகிறது.

இந்நிலையில் ரஷ்ய புலனாய்வு பிரிவின் பலவீனங்கள் பற்றி கடந்த வருடம் ரஷ்ய ஆதரவாளர்கள் பல்வேறான முறைப்பாடுகளை முன்வைத்தனர். (நி-5)

# கிரிமியாவையும் ரஷ்யாவையும் இணைக்கும் பாலம் சேதமடைந்ததால் இருவர் உயிரிழப்பு



(மொஸ்கோ)

ரஷ்யாவினால் இணைத்துக்கொள்ளப்பட்ட, உக்ரைனின் கிரிமியா பிராந்தியத்தையும் ரஷ்ய பெரு நிலப்பரப்பையும் இணைக்கும் பிரதான பாலத்தில் இடம்பெற்ற சம்பவத்தினால் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று காலை கிரிமியா பாலத்தில் அவசர நிலையொன்று ஏற்பட்டதாக தகவல் கிடைத்தது என ரஷ்யாவின் பெல்கோரொட் பிராந்திய ஆளுநர் வியாசேஸ்லாவ் கிளாட் கோவ் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தில் ஒரு தம்பதியினர் உயிரிழந்ததாகவும், அவர்களின் மகள் காயமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பாலத்தின் கிரிமியா பகுதி சேதமடைந்துள்ளது என ரஷ்ய போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது. இச்சம்பவம் தொடர்பான விபரங்களை அவ்வமைச்சு தெரிவிக்கவில்லை.

கிரிமியாவையும ரஷ்யாவின் க்ராஸ்னோடார் பிராந்தியத்தையும் இணைக்கும் இப்பாலத்தில் மேற்படி சம்பவத்தையடுத்து, போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது என ரஷ்ய அரச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (நி-5)

# பாக்முட் நகரின் பெரும் பகுதியை ரஷ்யாவிடம் இருந்து மீட்டது உக்ரைன்



(கீவ்)

70 ஆயிரம் மக்கள் வசித்த பாக்முட் ரஷ்ய தாக்குதலில் சீர்குலைந்தது எதிர் தாக்குதலில் உக்ரைன் படை ஏழு கி.மீற்றர் வரை முன்னோக்கி சென்றுள்ளது. கடந்த வருடம் பெப்ரவரி மாதம், ரஷ்யா தனது அண்டை நாடான உக்ரைனை ஆக்கிரமித்தது. அமெரிக்கா உட்பட மேற்கத்தேய நாடுகளின் உதவியோடு உக்ரைன் இதனை எதிர்த்து போராடி வருகிறது. 500 நாட்களுக்கும் மேலாக இந்த போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ரஷ்யாவிலிருந்து கடினமான தாக்குதல்களை சந்தித்து வருவதாக கூறிய உக்ரைன் இதனை எதிர் கொள்ள நீண்டதூரம் சென்று தாக்கும் ஆயுதங்களையும் பீரங்கிகளையும் வழங்குமாறு அமெரிக்கா மற்றும் பிற நட்பு நாடுகளுக்கு கோரிக்கை வைத்தது. ரஷ்ய படைகள் சென்ற மே மாதம் உக்ரைன் நாட்டின் கிழக்கு நகரமான பாக்முட்டைச் சுற்றியுள்ள பல சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பை கைப்பற்றியது. அப்பகுதிகளை இன்று தங்கள் படைகள் மீட்டதாக உக்ரைன் தெரிவித்துள்ளது. (நி-5)

# பிரான்ஸ் ஜனாதிபதிக்கு வந்த பொதியில் துண்டிக்கப்பட்ட கைவிரல்

(பாரிஸ்)

துண்டிக்கப்பட்ட கைவிரலுடன் பிரான்ஸ் ஜனாதிபதிக்கு பொதியொன்று வந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி இமானுவேல் மெக்ரானின் எலிசி மாளிகைக்கே குறித்த பொதியானது வந்துள்ளது.

இந்நிலையில் அப் பொதியைப் பார்த்து அதிர்ச்சியடைந்த பாதுகாப்புப் படையினர் "இது மக்களால் அரசுக்கு விடுக்கப்படும் மிரட்டல்" எனத் தெரிவித்துள்ளனர்.

மேலும் இது குறித்து தீவிர விசாரணைகளையும் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் 17 வயது கறுப்பினச் சிறுவனொருவன் போக்குவரத்துப் பொலிஸாரால் கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து பிரான்ஸ் முழுவதும் அரசுக்கு எதிராக பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன்போது போராட்டக்காரர்களால் பொலிஸ் நிலையங்கள், பாடசாலைகள் போன்ற அரசுக்கு சொந்தமான பல கட்டடங்கள் சேதப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# பாகிஸ்தானில் இடித்தழிக்கப்பட்ட மாரி மாதா இந்துக்கோவில்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் இரண்டு இந்துக் கோவில்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன் அதில் ஒரு கோவில் மீது ரொக்கட் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த சம்பவம் இந்துக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான் நாட்டில் கராச்சி நகரில் இராணுவ வீரர்களுக்கான பஜார் பகுதியில் முகி சோஹித்ரம் சாலையில் 150 ஆண்டு கால பழைமையான இந்து கோவில் ஒன்று அமைந்திருந்தது. மாரி மாதா என்ற பெயரிலான அந்த கோவில் கடந்த வெள்ளிக்கிழமை இரவோடு இரவாக இடித்து தரை மட்டம் ஆக்கப்பட்டது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







நல்லூர் இராசதானியின் சங்கிலியன் தோரண வாயில் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜின் பிரதிநிதியாக இந்தியத் துணைத்தூதரக அதிகாரி பிரவின் கலந்து கொண்டு தோரண வாயிலைத் திறந்து வைத்தார். சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சிவபாலசுந்தரன் தோரண வாயில் பெயர்ப்பலகையும், சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் ஆறு திருமுருகன் எதிர்காலத்தில் தோரண வாயிலில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திக்கான பெயர்ப் பலகையையும் திறந்து வைத்தனர்.

படங்கள்: சிவசாந்தன், கஜிந்தன்)

# 16 மணித்தியாலங்களாக அதிகரிக்கும் வேலை நேரம்?

(கொழும்பு)

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு, அஸ்வெசும நலன்புரி திட்டம் மற்றும் தற்போதைய புதிய தொழிலாளர் சட்ட மூலங்களின் ஊடாக அரசாங்கம் மக்களின் சுமையை மேலும் அதிகரித்துள்ளது என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றும் நோக்கில் கொண்டுவரப்படவுள்ள உத்தேச தொழிலாளர் சட்டமூலத்தினூடாக அரசாங்கம் தொழிலாளர்களின் உரிமைகளை பறிப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

இதுவரை தொழிலாளர்களின் உரிமைகளை உறுதிப்படுத்திய 13 சட்டங்களை இல்லாதொழிப்பதற்கு அரசாங்கம் முற்படுகின்றது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் போது உழைக்கும் மக்களின் உரிமைகளை உறுதி செய்வதே அரசாங்கத்தின் முக்கிய இலக்காக இருக்க வேண்டும்.

ஆனால், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு, அஸ்வெசும நலன்புரி திட்டம் மற்றும் தற்போதைய புதிய தொழிலாளர் சட்ட மூலங்களின் ஊடாக அரசாங்கம் மக்களின் சுமையை மேலும் அதிகரித்துள்ளது.

இந்த புதிய சட்டமூலத்தின் ஊடாக தொழிலாளர்களின் 8 மணிநேர வேலை நேரத்தை நீக்கி அதனை 12 மணித்தியாலங்களாக அதிகரிப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அத்துடன், தொழி



லாளர்களின் அனுமதியுடன் அதனை 16 மணிநேரமாக அதிகரிப்பதற்கான அபாயமும் காணப்படுகின்றது.

நாளாந்தம் 8 மணிநேர வேலைநேரம், உலகளாவிய ரீதியில் பல உயிர்களை இழந்து கடினமான போராட்டத்தின் பின்னர் பெறப்பட்ட ஒன்றாகும். அதனை இல்லாது செய்வது உழைக்கும் வர்க்கத்திற்கு பேரிழப்பாக மாறும் என குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் சுற்றுலாத்துறையானது சுற்றுலாப்பயணிகளின் வருகையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்து வருகின்றது. இந்த மாதத்தின் முதல் 13 நாட்களில் மாத்திரம் 55 ஆயிரத்து 566 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜூலை மாதத்தில் இந்தியாவில் இருந்தே அதிகளவானோர் இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ளனர். 8 ஆயிரத்து 169 பேர் இந்தியாவில் இருந்தும், 4 ஆயிரத்து 474 பேர் பிரித்தானியாவில் இருந்தும், 2 ஆயிரத்து 893 பேர் சீனாவில் இருந்தும் இந்த மாதத்தில் இலங்கைக்கு அதிகளவில் வந்துள்ளனர். இதன் மூலம் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 6 இலட்சத்து 80 ஆயிரத்து 440 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர். (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 220 | 280 | 300 |
| உருளைக்கிழங்கு | 240 | 240 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 450 | 500 | 500 | 600 |
| தக்காளி | 400 | 480 | 550 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 240 | 220 | 280 |
| கோவா | 300 | 250 | 280 | 250 |
| கரட் | 400 | 450 | 480 | 500 |
| பூசணி | 120 | 100 | 100 | 140 |
| புடோல் | 140 | 120 | 150 | 200 |
| வாழைக்காய் | 160 | 170 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 400 | 450 | 350 | 500 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 140 | 160 |
| பாகற்காய் | 400 | 350 | 400 | 500 |
| வெண்டக்காய் | 250 | 160 | 180 | 320 |
| கருணைக் கிழங்கு | 180 | 180 | 180 | 250 |
| பயற்றங்காய் | 200 | 250 | 180 | 200 |
| லீக்ஸ் | 250 | 200 | 250 | 300 |
| பீற்றூட் | 400 | 300 | 350 | 350 |
| கறிமிளகாய் | 350 | 320 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 350 | 400 |
| போஞ்சி | 550 | 450 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 150 | 250 | 280 |
| கீரை – 1 பிடி | 80 | 80 | 80 | 100 |
| தேசிக்காய் | 300 | 240 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 260 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 300 | 250 | 350 | 450 |
| முள்ளங்கி | 120 | 140 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 50 | 35 | 50 | 60 |
| ஈரப்பலா | 160 | 200 | 150 | 150 |

# கொழும்பு துறைமுக நகரத்தில் முதலாவது செயற்கை கடற்கரை திறப்பு



(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகர வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட செயற்கை கடற்கரை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை முதல் இந்த செயற்கை கடற்கரையை நாட்டு மக்களும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் இலவசமாக பார்வையிடும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த கடற்கரை சுமார் மூன்றரை கிலோமீற்றர் நீளம் கொண்டுள்ளது.

இந்த செயற்கை கடற்கரைக்கு மேலதிகமாக அதற்கு அருகில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உணவுகளுடன் கூடிய உணவு விற்பனை வளாகமும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி காட்டுப் பகுதியில் இரு நாட்களாக தீப்பரவல்

(தருமபுரம்)

**கிளிநொச்சி கல்மடுக்குளத்தில் பின்பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் இரண்டு நாட்களாக தீ பரவி வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.**



கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான குளங்களில் ஒன்றான கல்மடுகுளத்தில் தற்பொழுது புனரமைப்புப் பணிகள் இடம் பெற்று வரும் நிலையில் குளத்தின் பின் பகுதிகள் உள்ள காட்டுப்பகுதியில் இரண்டு நாட்களாக தீ பரவி வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் சம்பவம் தொடர்பாக வன பாதுகாப்பு பிரிவினருக்கும் தெரிவித்துள்ளனர்.

அப்பகுதியில் சில இடங்கள் தீயில் முற்றாக எரிந்த நிலையில் காணப்படுவதுடன் சில இடங்களில் தற்பொழுதும் தீ பரவி வருவதாக தெரிவித்துள்ளனர்.

சில பகுதிகளில் பாரிய மரங்கள் முறிந்து விழக்கூடிய நிலையில் தீப்பரவல் இடம் பெற்று வருவதாகவும் வன வள திணைக்களம் காட்டுத் தீயினை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-316)

# யானைகளிடமிருந்து பாதுகாக்கக் கோரி கல்மடுநகர் மக்கள் கவனயீர்ப்பு




(கண்டாவளை)

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கல்மடுநகர் ரங்கன் குடியிருப்பு பகுதியில் தொடர்ச்சியாக காட்டு யானைகள் குடியிருப்புகள் பகுதியில் உட்புகுந்து மக்களின் வாழ்வாதாரத்தை அழித்து வருவதுடன்மக்களின் உடைமைகளுக்கும் சேதம் ஏற்படுத்தி வருவதாகவும் இது தொடர்பாக பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்திருந்த போதிலும் எந்தவித உரிய நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரிவித்து அப்பகுதி மக்கள் கவனயீர்ப்பு ஒன்றை முன்னெடுத்தனர்.

இதேவேளை இரவு வேளைகளில் சிறுவர்கள் மற்றும் முதியவர்கள் என பலரும் நித்திரை இன்றி கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளதாகவும் எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார். (4-5-316)

# கனேடிய உயர்ஸ்தானிகர்- சிறீதரன் எம்.பி சந்திப்பு



(அராலி)

இலங்கைக்கான கனேடியத் தூதரகத்தின் உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸ்"க்கும் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று சிறீதரனின் இல்லத்தில் நடைபெற்றுள்ளது.

இச்சந்திப்பின் ஆரம்பத்தில், ஈழத்தமிழர்கள் நலன்சார் செயற்பாடுகளிலும் இன அழிப்புக்கான நீதி கோரல் செயன்முறையிலும் கனடா அரசாங்கம் தொடர்ச்சியாக குரல் கொடுத்து வருவதற்கு தனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாக பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

இதன்போது இலங்கையில் நடைபெற்றது இன அழிப்புத்தான் என்பதையும் அதற்குரிய நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தி கனேடிய பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக, அப்பிரேரணைக்கு வலுச்சேர்க்கும் வகையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையினால் நடத்தப்பட்ட நிகழ்வையும் கனேடிய உயர்ஸ்தானிகர் நினைவுகூர்ந்திருந்தார்.

இதன்போது போருக்குப் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ள 4374.8 ஏக்கர் காணிகள் தொடர்பான விபரங்களும் 2009 இற்குப் பின்னர் வடக்கு கிழக்கிலுள்ள தமிழர்களின் பூர்வீக நிலங்களை அடாத்தாக அபகரித்து, அவ்விடங்களில் புதிதாக அமைக் கப்பட்டுள்ள 71 விகாரைகள் குறித்த விபரண அறிக்கையும் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனால், கனேடிய உயர்ஸ்தானிகரிடம் கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-5-104)

# மீசாலை பன்றிக்கேணி கந்தசுவாமி ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிமீசாலை அருள் மிகு பன்றிக்கேணி கந்தசுவாமி கோயில் முதலாவது மஹோற்சவம் நாளை புதன் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறும் இவ்மஹோற்சவத்தில் எதிர்வரும் 1 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (4-5)


# இராசிபலன்

18.07.2023
ஆடி 02, செவ்வாய்க்கிழமை
பிரதமை பின்னிரவு 2.05 மணிவரை
பூசம் முழுவதும்

சுபநேரம் -10.30-12.00 மணிவரை
இராகுகாலம்-3.00-4.30மணிவரை

சந்திராஷ்டமம்- மூலம்


வளவன்





சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்,சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.




வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்,வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் மேலோங்கும் நாள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.




எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு, பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.




விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், நட்பு வட்டம் விரிவடையும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், காரிய அனுகூலமுண்டு.




உறவினர் வழியில் உள்ளம் மகிழும் செய்திகள் வந்து சேரலாம், செய் தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள்.




தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்,புதிய முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு,பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.




ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும், மறைமுகப்போட்டிகள் மாறும்.




வங்கிச் சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் மேலோங்கும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள்,நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், போசன சுகமுண்டு.




தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சகோதர வழியில் நன்மையுண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு.




குடும்பப் பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள்,கௌரவக் குறைவான நாள்.




இல்லத்தில் இனிய சம்வங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அறிவை விலை கொடுத்து வாங்கி விடலாம். ஆனால்,உணர்ச்சி,அன்பு இவை என்றும் விற்பனைக்கு வருவதில்லை. – லவல்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பரீட்சைப் பெறுபேற்றுக்கான படிப்பாகிவிட்டபோது...

இன்றைய் மாணவர்களின் கல்வி என்பது பரீட்சைப் பெறுபேற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளதேயன்றி, மனித வாழ்க்கைக்கான தயார்படுத்தலை இலக்காகக் கொண்டதல்ல.

இதன் காரணமாக மனித விழுமியம், பண்பாடு, கலாசாரம் என்பன சிதைவடைந்து தனித்து பணம் ஈட்டும் சிந்தனை மட்டுமே மேலோங்கி நிற்கிறது.

ஆம், இன்றைய எங்கள் மாணவர்களைப் பொறுத்தவரை அவர்கள் பாடசாலைக்கு இரண்டாம் இடத்தையும் தனியார் கல்விக்கு முதலிடத்தையும் கொடுக்கின்றனர்.

சிலவேளைகளில் தனியார் கல்வி நிறுவனங்கள் நடத்துகின்ற வகுப்பு நேரங்களைக் கவனித்திலெடுத்துப் பாடசாலைகள் நேர அட்டவணை தயாரிக்கின்ற சூழ்நிலைக்கும் ஆளாகியுள்ளன. அந்தளவுக்கு நிலைமை மாறிவிட்டது.

ஆனால் எங்கள் முன்னைய நிலைமை அதுவன்று. பாடசாலைக் கல்வி மட்டுமே அன்றைய மாணவர்களுக்குப் படிப்பாக இருந்தது.

ஆசிரியர்கள் தமது பாடத்துடன் ஏனைய பொது விடயங்களையும் மாணவர்களுக்கு எடுத்துக்கூறி அவர்களை ஆளுமைமிக்க மாணவர்களாக ஆக்கினர்.

இதுதவிர, பாடசாலைகள் பகல் பொழுது முழுமையும் இயங்கு நிலையில் இருந்தன.

ஆம் காலைப்பொழுதில் மேலதிக வகுப்புகள். மாலைப் பொழுதில் ஒரு பகுதி மாணவர்கள் விளையாட்டு மைதானத்தில் பயிற்சி பெற, இன்னொரு தரப்பு மாணவர்கள் பேச்சு, இசை, நாடகம் என தமது ஆற்றலை விருத்தி செய்யும் பயிற்சியில் ஈடுபட்டனர்.

இவை தவிர, பாடசாலைகளில் இயங்கக் கூடிய மாணவர் மன்றங்கள் அவற்றின் கூட்டங்கள், புத்தக வெளியீடுகள், விழாக்களுக்கான ஏற்பாடுகள் என அனைத்து ஒழுங்கமைப்புகளிலும் மாணவர்கள் அனைவரும் முழுமையாக ஈடுபட்டனர்.

அத்தகைய மாணவர்கள் இனம், மதம், தான் பிறந்த மண், தான் வாழ்ந்த வீடு, தான் கும்பிட்ட குலதெய்வம், ஊர், உறவு, அயல், நட்பு எனத் தமது சிந்தனைப் புலத்தை விரிவுபடுத்தி மனிதநேயத்தோடு வாழ்கின்றனர்.

அதிலும் புலம்பெயர்ந்து வாழுகின்ற இத்தகைய மாணவர்கள் இப்போது பெரியவர்களாகிவிட்டபோதிலும் தாம் கற்ற பாடசாலையை – தமக்குக் கற்பித்த ஆசிரியர்களை – தமது சக மாணவர்களை ஒன்றாகச் சந்திக்கவும் தாம் படித்த பாடசாலைகளில் அச்சந்திப்பை மேற்கொள்ளவும் கொண்டுள்ள ஆர்வம் கண்டு நெகிழாமல் இருக்க முடியாது.

உண்மை. இலட்சக்கணக்கான பணத்தைச் செலவிட்டு தம் தாயகத்துக்கு வந்து தாங்கள் படித்த பாடசாலையில் ஒன்று கூடி பசுமையான பழைய நினைவுகளை மீட்டு மகிழுகின்ற மனநிலை என்பது மனிதத்தின் உச்சம் எனலாம்.

இந்த மனநிலையை நம் சமகால மாணவர்களிடமும் ஏற்படுத்த வேண்டுமாயின், எங்கள் இனத்தின், எங்கள் பண்பாட்டின், எங்கள் கலாசாரத்தின், எங்கள் வாழ்வியலின் உயர் பெறுமானங்களை எம் மாணவர்களுக்கு எடுத்துக்கூறி அவர்களை ஆற்றுப்படுத்த வேண்டும்.

அப்போதுதான் அவர்களும் பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்... என்ற உணர்வை தம் முள் பிரதிஷ்டை செய்வர்.

ஆகையால் எங்கள் பாடசாலைக் கல்வியில்; மாணவர்களை மனிதநேயம் மிக்கவர்களாக ஆக்குகின்ற ஆளுமையை உருவாக்க நாம் அனைவரும் அப்பணியோடு செயலாற்ற வேண்டும்.

# சூழ்ச்சிகளால் அரசாங்கத்தை கவிழ்க்க எதிர்க்கட்சி முயற்சிப்பது வெட்கக்கேடானது

## அமைச்சர் ஷாந்த பண்டார

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் வெற்றியை சகித்துக் கொள்ள முடியாத எதிர்க்கட்சி சூழ்ச்சிகள் மூலம் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கான நடவடிக்கை களை முன்னெடுத்து வருகிறது.

இது வெட்கக்கேடான விடயமாகும். இதற்கு ஒரு போதும் இடமளிக்கப்போவதில்லை என ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் ஷாந்த பண்டார தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டால், ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் ஆளும் கட்சி பாராளுமன்றக் குழு கூட்டத்தில் கலந்துரையாடி அதனை எதிர்கொள்வோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அத்தியாவசிய பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியாமல் மக்கள் வரிசைகளில் காத்திருந்து சில சந்தர்ப்பங்களில் உயிரைக் கூட இழக்க வேண்டிய நிலைமையிலேயே கடந்த ஆண்டு நாடு காணப்பட்டது.

அந்த சந்தர்ப்பத்தில் நாட்டைப் பொறுப்பேற்குமாறு விடுக்கப்பட்ட அழைப்பை எதிர்த்தரப்பினர் எவரும் ஏற்கவில்லை.

எனினும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனித்து அந்தச் சவாலை ஏற்று, இன்று அதில் வெற்றியும் பெற்றுள்ளார்.

இதனை சகித்துக் கொள்ள முடியாத எதிர்க்கட்சி இன்று நாட்டில் மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்தி அரசாங்கத்தை கவிழ்ப்ப தற்கு சூழ்ச்சி செய்து கொண்டிருக்கிறது.

அதற்காகவே ஏனைய எதிர்க்கட்சிகளுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் தொழிற் சங்கத்தினருக்கும் அழைப்பு விடுகின்றது.

எவ்வாறான சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை ஒருபோதும் கவிழ்க்க முடியாது.

அதற்கு நாம் இடமளிக்கவும் மாட்டோம் என அவர் தெரிவித்தார். (நி)

# கோதுமைமாவுக்கு மீண்டும் தட்டுப்பாடு?

(கொழும்பு)

கோதுமைமா இறக்குமதிக்கு மீண்டும் அனுமதி வழங்கப்படாவிட்டால், இன்னும் இரண்டு வாரங்களில் நாட்டில் கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம் என அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நாட்டுக்கு இறக்குமதிசெய்யப்படும் கோதுமைமா 2 வார காலத்திற்கு மட்டுமே போதுமானது.

வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோவுடன் பல தடவைகள் கலந்துரையாடிய போதிலும் கோதுமைமா இறக்குமதி தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என சிரேஷ்ட பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# குழந்தையின் உயிரையும் காவு கொண்ட தடுப்பூசி

## இலங்கையில் தொடரும் சோகம்

(கொழும்பு)

தடுப்பூசி செலுத்தி ஒரு நாளைக்கு பிறகு திடீரென ஏற்பட்ட நோய் நிலைமை காரணமாக, 4 மாத குழந்தையொன்று உயிரிழந்த சம்பவம் குளியாப்பிட்டிய மருத்துவமனையில் பதிவாகியுள்ளது.

கடந்த சனிக்கிழமை 4 மாத குழந்தைக்கு பண்டுவஸ்நுவர மேற்கு சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலயத்தினால் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

தடுப்பூசி செலுத்தப்பட்ட பின்னர் காய்ச்சல் அறிகுறிகள் ஏற்பட்டுள்ளதுடன், உரிய சிகிச்சைகள் அளிக்கப்பட்ட பின்னரும் குறித்த குழந்தைக்கு காய்ச்சல் அதிகரித்துள்ளது.

பின்னர் அந்த குழந்தையை குளியாப்பிட்டிய போதனா மருத்துவமனையில் அனுமதித்த நிலையில் குறித்த குழந்தை உயிரிழந்து விட்டதாக மருத்துவமனை தகவல்கள் குறிப்பிடுகின்றன.

குறித்த குழந்தையின் சடலம் தற்போது, குருநாகல் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் பிரேத பரிசோதனையின் பின்னர், குறித்த குழந்தைக்கு செலுத்தப்பட்ட தடுப்பூசியின் தாக்கம் உள்ளதா என்பது தொடர்பில், அறிந்து கொள்ள முடியும் என மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-5)

# நம்பிக்கையில்லா தீர்மானத்தை எதிர்கொள்ளத் தயார்-ரம்புக்வெல

(கொழும்பு)

எந்தவொரு நம்பிக்கையில்லா தீர்மானத்தையும் எதிர்கொள்ள தயார் என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

பொறுப்பினை கைவிட்டு ஓடுவதற்கு பதில் நம்பிக்கையில்லா தீர்மானத்தை எதிர்கொள்ள தயார் என அவர் குறிப்பிட்டுளளார்.

நாங்கள் எங்கள் கடமைகளை செய்வதற்கு தவற மாட்டோம் என உத்தரவாதம் அளிக்கின்றேன் என குறிப்பிட்டுள்ள அமைச்சர், அவ்வாறானதொரு காலம் இருந்தது. ஆனால் நாங்கள் சவால்களை எதிர்கொண்டு மக்களுக்கு சேவையாற்றுவோம் எனவும் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# இஞ்சியின் விலை உயர்வு

(கொழும்பு)

ஒரு கிலோ இஞ்சியின் சில்லறை விலை 2400 ரூபாவாக அதிகரித்துள்ளது.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோ இஞ்சி 1100 முதல் 1200 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகிறது.

இஞ்சி வியாபாரத்தில் சில்லறை வியாபாரிகள் பெரும் லாபம் ஈட்டுவதாக மொத்த வியாபாரிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

தற்போது விளைச்சல் குறைந்ததால் இஞ்சி விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (நி-5)

# கடும் சரிவில் இலங்கை ரூபா

## வேகமாக உயரும் டொலரின் பெறுமதி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் கடுமையான வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

இந்த நிலையில், இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நேற்றைய நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 327.16 ரூபாவாகவும் கொள்வனவு விலை 313.29 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

கனேடிய டொலரின் விற்பனை விலை 249.00 ரூபாவாகவும் கொள்வனவு விலை 235.21 ரூபாவாகவும் யூரோ ஒன்றின் விற்பனை பெறுமதி 368.78 ரூபாவாகவும் கொள்வனவு பெறுமதி 350.96 ரூபாவாகவும் ஸ்டெர்லிங் பவுண்டின் விற்பனை பெறுமதி 429.47 ரூபாவாகவும் கொள்வனவு பெறுமதி 408.83 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

மேலும் நேற்றைய தினம் பல வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக ரூபாவின் பெறுமதி கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** சன்னார் இராணுவமுகாம், ஈச்சலவக்கை, பெரியமடு, பெரியமடு கிழக்கு திட்டம், பெரியமடு நீரவழாங்கல் சபை, பெரியமடு மேற்கு திட்டம், சன்னார், பள்ளமடு, சன்னார் கிராமம், மகாறம்பைக்குளம், ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** புதுக்குடியிருப்பு பிரதேசத்திலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

18

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



ஏழு மாதங்கள் மட்டுமே ஆட்சியில் இருந்த நான்காம் தப்புலன் காலமான பின்னர் அதே பெயர் கொண்டவனும் துணை அரசனாக இருந்தவனுமான ஐந்தாம் தப்புலன் அரசனானான்.

**ஐந்தாம் தப்புலன்**
**(கி.பி. 924-935)**

நான்காம் தப்புலன் காலமான பின்னர் ஐந்தாம் தப்புலன் அரியணையில் அமர்ந்தான். கி.பி. 924 இல் அரசனான இவன் கி.பி. 935 வரை ஆட்சி நடத்தினான்.

இவன் காலத்தில் சோழர்களுக்குப் பயந்த பாண்டிய மன்னன் இலங்கைக்கு வந்தான். அவனை வரவேற்று நகருக்கு வெளியே அவன் தங்குவதற்கு இடமும் பிற வசதிகளையும் ஐந்தாம் தப்புலன் செய்து கொடுத்ததாகவும் பாண்டியன் தன்னுடைய நாட்டைத் திரும்பப் பெறுவதற்கு உதவ அவன் எண்ணியிருந்ததாகவும் மகாவமசம் கூறுகிறது. இந்த நேரத்தில், ஏதோ காரணத்தால் இலங்கையில் இளவரசர்களிடையே பெரும் சச்சரவுகள் உருவாகின. இலங்கையில் தங்கியிருப்பதில் பயன் எதுவும் இல்லை என்று கண்ட பாண்டியன், சேர நாட்டுக்குச் சென்று விட்டான்.

தனது முன்னோர்களைப் பின்பற்றி நாட்டை ஆண்டு வந்த ஐந்தாம் தப்புலன் தனது 12 ஆவது ஆட்சியாண்டில் காலமானான். அவனைத் தொடர்ந்து துணை அரசனாக இருந்த இரண்டாம் உதயன் அரசனானான்.

**இரண்டாம் உதயன்**
**(கி.பி. 935-938)**

இரண்டாம் உதயன் என்பவன், அநுராதபுரத்தில் இருந்து இலங்கையை ஆண்ட மன்னர்களில் ஒருவன். இவன், அரசனாக இருந்த ஐந்தாம் தப்புலனின் மறைவுக்குப் பின் அரசனானான். கி.பி. 935 இல் அரியணை ஏறிய இரண்டாம் உதயன், கி.பி 938 வரை ஆட்சி நடத்தினான்.

இவன் தனது சகோதரன் சேனன் என்பவனைத் துணை அரசன் ஆக்கினான். அரசனது அதிருப்திக்கு உள்ளாகி அரசனால் தமக்குத் தீங்கு விளையக் கூடும் என்று எண்ணிய சில அமைச்சர்கள், புத்தமத சாதுக்கள் தமது தவ வாழ்வை மேற்கொள்ளும் தபோவனங்களுக்குச் சென்று மறைந்து வாழ்ந்தனர். இதை அறிந்த அரசனும் துணையரசனும் அங்கு சென்று அவர்களைப் பிடித்து அவர்களது தலைகளைச் சீவிக் கொலை செய்தனர். இது அங்கு வாழ்ந்த சாதுக்களைக் கோபமுறச் செய்தது. அதனால் அவர்கள் அவ்விடத்தை விட்டு நீங்கி ருகுணைக்குச் (ரோகணத்துக்குச்) சென்று விட்டனர். இதனால் கோபமுற்ற நாட்டு மக்களும் போர் வீரர்களும் கிளர்ந்து எழுந்தனர். அவர்கள் அரசனின் நடவடிக்கைக்கு உதவிய அமைச்சர்களைப் பிடித்துக் கொண்டு அபயகிரி விகாரையில் இருந்த "இரத்தினப்பாசாதம்" என்னும் உயரமான கட்டடத்தில் ஏறி அவர்களது தலைகளைச் சீவிச்சாளரம் வழியாக வெளியில் எறிந்தனர். இதைக் கேள்வியுற்ற துணையரசனும் அவனது நண்பனும் ரோரணத்துக்குத் தப்பியோடினர்.

அங்கே சாதுக்களைச் சந்தித்துத் தமது பிழைக்கு மன்னிப்புப் பெற்றுக் கொண்டதுடன் நாட்டிலிருந்த மூன்று புத்த பீடங்களின் துணையுடன் அவர்களை மீண்டும் அநுராதபுரத்துக்கு அழைத்து வந்தனர். அரசனும் அவர்களை நேரில் வரவேற்று மன்னிப்புப் பெற்றுக் கொண்டான்.

அதன் பின்னர் அரசன் தனது முன்னோர்களைப் பின்பற்றி நற்பணிகளைச் செய்து நாட்டை ஆண்டு வந்தான். மூன்றாவது ஆட்சியாண்டில் இரண்டாம் உதயன் இறக்கவே துணை அரசன் மூன்றாம் சேனன் ஆட்சிபீடம் ஏறினான்.

**மூன்றாம் சேனன்**
**(கி.பி. 938-946)**

இரண்டாம் உதயனின் சகோதரனான மூன்றாம் சேனன் என்பவன், அநுராதபுரத்தில் இருந்து இலங்கையை ஆண்ட சிங்கள அரசர்களுள் ஒருவன். இரண்டாம் உதயன் காலமான பின்னர் இவன் அரசுரிமை பெற்றான். கி.பி. 938 இல் அரியணை ஏறிய மூன்றாம் சேனன் கி.பி. 946 வரை அரசு புரிந்தான்.

துணை அரசனாக இருந்த போது சாதுக்களதும் மக்களினதும் கோபத்துக்கு ஆளாகியிருந்த போதிலும் இவன் ஒரு மதிநுட்பம் வாய்ந்த அரசன் என்று மகாவம்சம் கூறுகிறது. இவன் பதவி ஏற்றதும் பல்வேறு அறச் செயல்களில் ஈடுபட்டான். தானும் மத அனுட்டானங்களில் ஈடுபட்டான். மதகுருமாருக்கான உறைவிடங்களைக் கட்டிக் கொடுத்ததுடன் அவர்களுக்கான பிறவசதிகளையும் செய்து கொடுத்தான். இலங்கை முழுவதிலும் இருந்த பழைய விகாரைகளைத் திருத்தினான். முன்னோர்கள் செய்த திருப்பணிகளைப் பேணுவதற்கான ஒழுங்குகளையும் செய்ததுடன் விகாரைகளுக்குப் படிமங்களையும் ஓவியங்களையும் வழங்கினான். புத்த சமய விழாக்களையும் ஒழுங்காக நடத்தினான். பாசனத்துக்கான குளங்களைத் திருத்தி வேளாண்மையை மேம்படுத்த உதவினான்.

தனது ஒன்பதாவது ஆட்சியாண்டில் மூன்றாம் சேனன் இவ்வுலக வாழ்வை நீத்தான். இவனுக்குப் பின் இவனது நண்பனும் துணை அரசனுமான மூன்றாம் உதயன் அரசனானான்.

**மூன்றாம் உதயன்**
**(கி.பி. 946-952)**

மூன்றாம் உதயன் என்பவன், அநுராதபுரத்தில் இருந்து இலங்கையை ஆண்ட சிங்கள மன்னர்களில் ஒருவன். மூன்றாம் சேனன் இறந்த பின்னர் துணை அரசனாக இருந்த இவன் அரியணையில் அமர்ந்தான். கி.பி. 946 இல் முடிசூட்டிக் கொண்ட மூன்றாம் உதயன் கி.பி. 952 வரை ஆட்சியில் இருந்தான்.

ஆட்சி பீடம் ஏறிய பின்னர் இவன் குடிப் பழக்கத்துக்கு அடிமையாகி விட்டதாகவும் சோம்பேறித்தனம் கொண்டவனாக ஆகிவிட்டதாகவும் தெரிகிறது. இந்த நிலைமை சோழருக்குச் சாதகமாக அமைந்தது. இதனால் இலங்கை மீது அவர்கள் தமது கவனத்தைத் திருப்பினர்.

முன்னர் பாண்டிய மன்னன் தன் நாட்டிலிருந்து தப்பி இலங்கைக்கு வந்திருந்த போது கொண்டு வந்திருந்த தனது முடியையும் பிற பொருட்களையும் இலங்கையிலேயே விட்டுச் சென்றிருந்தான். பாண்டிய நாட்டை ஏற்கெனவே கைப்பற்றியிருந்த சோழர் அப்பொருட்களைத் தங்களிடம் ஒப்படைக்குமாறு இலங்கை மன்னனிடம் கோரினர். இலங்கை மன்னன் அதற்கு மறுக்கவே, அக்காலத்தில் மிகப் பலம் வாய்ந்தவர்களாக இருந்த சோழர் இலங்கை மேல் படையெடுத்தனர். எதிர்த் தாக்குதல் நடத்தச் சென்ற சிங்களப் படைகளும் அதன் தளபதியும் அழிந்தனர். சோழர் அநுராதபுரத்தைச் சூறையாடி பாண்டியனின் மணிமுடியையும் பாண்டியனின் ஏனைய உடைமைகளையும் கைப்பற்றினர். அரசனின் மாளிகையும் எரிக்கப்பட்டது. ருகுணு (ரோகணம்) வரை படை நடத்திச் சென்ற சோழர் பின்னர் நாட்டுக்குத் திரும்பிச் சென்றனர்.

சோழர் நாடு திரும்பிய பின்னர், அரசன் மகாவிகாரையில் உள்ள புத்தர் சிலைக்குப் பெறுமதியான இரத்தினக் கற்கள் இழைத்த முடியொன்றை வழங்கினான். தன்னுடைய எரிந்த மாளிகையை மீளக் கட்டிக் கொண்டிருந்த காலத்தில், தனது எட்டாம் ஆட்சியாண்டில் மூன்றாம் உதயன் இவ்வுலக வாழ்வை நீத்தான்.

**நான்காம் சேனன்**
**(கி.பி. 952-955)**

நான்காம் சேனன் என்பவன், அநுராதபுரத்தில் இருந்து இலங்கையை ஆண்ட சிங்கள மன்னர்களில் ஒருவன். முன்னர் பகுதி ஒன்றின் ஆளுநனாகவும் மூன்றாம் உதயன் காலத்தில் துணை அரசனாகவும் நியமிக்கப்பட்ட இவன், மூன்றாம் உதயனுக்குப் பின்னர் அரசனாகி, கி.பி. 952 தொடக்கம் கி.பி. 955 வரை ஆட்சியில் இருந்தான்.

இவன் ஒரு மதிநுட்பம் வாய்ந்த அரசன் என்றும் சிறந்த கல்விமானாக இருந்ததுடன், செயல் வீரனாக இருந்ததாகவும் நண்பர்களையும் எதிரிகளையும் அளவோடு நடத்தினான் என்றும் இவன் காலத்தில் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள் என்றும் மகாவம்சம் கூறுகிறது. புத்தரின் தந்ததாது வைத்துள்ள பேழையை இரத்தினங்களால் அழகூட்டுவித்தான் என்றும் தந்ததாதுவுக்கு நான்கு விகாரைகளிலும் விழா எடுப்பித்தான் என்றும் தெரிகிறது. முன்னர் அவன் வாழ்ந்து வந்த சித்தகமை என்னும் இடத்தில் பிரிவேனா ஒன்றையும் கட்டினான். இவன் காலத்தில் நாட்டில் குறிப்பிடத்தக்க குழப்பங்கள் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

குறுகிய காலமே ஆட்சியில் இருந்த நான்காம் சேனன், த்னது மூன்றாவது ஆட்சியாண்டில் காலமானான். இவனைத் தொடர்ந்து துணை அரசனாக இருந்த நான்காம் மகிந்தன் அரசனானான்.

**நான்காம் மகிந்தன்**
**(கி.பி. 955-972)**

நான்காம் மகிந்தன் என்பவன், அநுராதபுரத்தில் இருந்து இலங்கையை ஆண்ட சிங்கள மன்னர்களில் ஒருவன். நான்காம் சேனனுக்குப் பின்னர் அரசனான இவன், கி.பி. 955 தொடக்கம் கி.பி. 972 வரை ஆட்சியில் இருந்தான்.

இவன் பெருஞ் செல்வமும் புகழும் படைவலியும் கொண்டவனாக இருந்தான். அதனால், தனக்கு எதிரான சூழ்ச்சிகள் அனைத்தையும் முறியடித்து பகுதித் சிற்றரசர்களைப் பணிய வைத்து நாட்டை ஒற்றுமைப்படுத்தினான். நாட்டில் அரச மரபின் வழி வந்த பொருத்தமான பெண்கள் இருக்கவும் கலிங்க நாட்டில் இருந்து இளவரசி ஒருத்தியை வரவழைத்து மணம் செய்து கொண்டான். அவளையே பட்டத்து அரசியாகவும் ஆக்கினான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2023 - 17.08.2023



நினைத்ததை முடிக்கும் ஆற்றல் பெற்ற மேஷ இராசி வாசகர்களே!

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் கிரக நிலைகள் சாதகமாகவே இருக்கின்றன.

"புத ஆதித்ய யோகம்", "குரு மங்கல யோகம்", "சுக்கிர மங்கல யோகம்" போன்றவை அமையும்

**மேஷ - குரு சஞ்சாரம்**

நவக்கிரகத்தில் சுபகிரகம் என்று சொல்லக்கூடிய குரு பகவான், மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியிலேயே வீற்றிருக்கிறார். அவரது பார்வை 5, 7, 9 ஆகிய இடங்களில் பதிகிறது. பூர்வ புண்ணிய ஸ்தானத்தை குரு பகவான் பார்ப்பதால் தெய்வ பலம் உங்களை வழி நடத்திச் செல்லும். எனவே கவலைப்பட வேண்டிய தில்லை.

உங்களுக்கு அனுகூலம் தரும் தெய்வங்களைத் தேர்ந்தெடுத்து, புகழ் பெற்ற புராதனக் கோவில்களுக்குச் சென்று வழிபட்டு வந்தால் நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாகவும் கல்யாணம் சம்பந்தமாகவும் எடுத்த முயற்சி கைகூடும்.

பூர்வீகச் சொத்து, பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். குருவின் பார்வை பலத்தால் சப்தம ஸ்தானம் புனிதமடைகிறது. எனவே மாங்கல எல்லாம் சிக்கல்கள் இருந்ததோ அவை அனைத்தும் விலகி நன்மைகளை வழங்கப் போகிறது. உத்தியோகம் சம்பந்தமாக புதிய முயற்சிகள் செய்தால் அது கைகூடும். 9 ஆம் இடத்தைக் குரு பகவான் பார்ப்பதால் வெளிநாட்டில் உள்ள நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். புதிய




வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். அண்ணன், தம்பிகளுக்குள் இருந்த அரசல் புரசல்கள் மாறும். குருவை வியாழக்

சிம்ம இராசிக்குப் புதன் வருகிறார். 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு வரும் பொழுது நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். நம்பிக்கைக்குரிய விதத்தில் நண்பர்கள் நடந்து கொள்வர்.

முக்கியப் புள்ளிகள் உங்கள் முன்னேற்றத்திற்கு உதவிகரமாக இருப்பர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வும் பதவி உயர்வும் எதிர்பாராத விதத்தில் வந்து சேரும். வழக்குகள் சாதகமாக அமையும். மாற்று மருத்துவத்தால் உடல்நலம் சீராகும்.

பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு செல்வாக்கு அதிகரிக்கும். வியாபாரம், தொழில் செய்பவர்களுக்கு மாதத்தின் பிற்பகுதியில் மகிழ்ச்சி அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வரும் சந்தர்ப்பங்களால் வளர்ச்சி

## புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்!

...ததில் கிரக நிலைகள் இருப்பதால், பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தொழிலில் திடீர் திருப்பங்களும் திரவிய லாபமும் உண்டு.

ஓசை மனையில் கேட்க வழிபிறக்கும். தங்கு தடைகள் தானாக விலகும். ஜென்மத்தில் இராகுவும் சப்தம ஸ்தானத்தில் கேதுவும் இருந்தாலும் குரு பார்வை பதிவதால் இதுவரை உங்களுக்கு எந்தெந்த செயற்பாடுகளில்

கிழமை தோறும் வழிபடுவதன் மூலம் மேலும் நற்பலன்களை பெறமுடியும்.

**சிம்ம - புதன்**

ஆடி 7 ஆம் திகதி, கூடும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் தேடிவரும். மாணவ-மாணவிகள் எதிர்பார்த்த இலக்கை அடைவர். பெண்களுக்கு குடும்பச்சுமை கூடும். ஒரு தொகை செலவழிந்த பின்னரே மற்றொரு தொகை கரங்களில் புரளும். பொறுமை தேவை.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



தனக்கென தனிப்பாணியை அமைத்துக் கொள்ளும் ரிஷப இராசி வாசகர்களே!

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன், இராசிக்கு 4 ஆம் இடமான சுக ஸ்தானத்தில் விரயாதிபதி செவ்வாயோடு இணைந்து சஞ்சரிக்கிறார். மேலும் வழிவகுக்கும். குருவின் பார்வை உங்கள் இராசிநாதன் மீது பதிவதால் காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடிவிடும்.

**மேஷ - குரு சஞ்சாரம்**

நவக்கிரகத்தில் சுப கிரகம் என்று சொல்லப்படுபவர் குரு பகவான். அவர் உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு பகைக் கிரகமாக கருதப்படுபவர். அந்த குரு உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்தில் இராகுவோடு இணைந்து சஞ்சரிக்கிறார். அவரது பார்வைக்கு பலன் உண்டு என்பதால், அந்த அடிப்படையில் சில நல்ல பலன்களும் உங்களுக்கு ஏற்படலாம்.

குருவின் பார்வை 4, 6, 8 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே தாய்வழி ஆதரவு கிடைக்கும். உறவினர்கள் இடையே ஏற்பட்ட மனக்கசப்பு மாறும். வாடகைக் கட்டடத்தில் நடைபெற்ற தொழிலை, சொந்தக் கட்டடத்திற்கு மாற்ற

யிலேயே நோய் குணமாகும்'. இராகுவோடு குரு இணைந்திருப்பதால் பயணங்கள் அதிகரிக்கும். தூர தேசத்தில் இருந்து கூட அழைப்புகள் வரலாம். கேதுவின் மீது குருவின் பார்வை பதிவதால் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். அஷ்டம ஸ்தானத்திலும் குரு பார்வை பதிவதால் இழப்புகளை ஈடு செய்யப் புதிய வாய்ப்புகள் வந்து சேரும். விலகியிருந்த சொந்தங்கள் மீண்டும்




வந்திணைவர். பழைய தொழிலைக் கொடுத்து விட்டுப் புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்ம - புதன்**

ஆடி 7 ஆம் திகதி, சிம்ம இராசிக்குப் புதன் வருகிறார். உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் சுக ஸ்தானத்திற்கு வருவது நன்மை தான். "புத சுக்கிர யோகம்" செயற்படும் இந்த நேரத்தில், சுக்கிரன் மீது குருவின் பார்வையும் பதிவதால் இக்காலம் ஒரு இனிய காலமாகும். பிள்ளைகளின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். மதிப்பும் மரியாதையும் உயரும். தொழில் வெற்றி நடைபோடும்.

உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு திருப்தி தரும். பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து உதிரிவருமானங்களும் வந்து சேரும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும். வியாபாரம், தொழில் 'செய்பவர்களுக்குச் சாதகமான நேரம் இது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது. கலைஞர்களுக்கு நல்ல வாய்ப்புகள் சில கைநழுவிப்

## உறவினரிடையே ஏற்பட்ட மனக்கசப்பு மாறும்!

தொழில் ஸ்தானத்தில் வக்கிரமாக சஞ்சரிக்கும் சனியையும் பார்க்கிறார். எனவே தடைகளும் தாமதங்களும் அதிகரிக்கலாம். ஆரோக்கியத் தொல்லைகளும் அடிக்கடி வந்து அலைமோதும். அவ்வப்போது நீங்கள் மேற்கொள்ளும் ஆலய வழிபாடு நன்மைக்கு

லாமா? என்று சிந்திப்பீர்கள். தொழிலை விரிவு செய்ய எடுத்த முயற்சிக்கு, கேட்ட இடத்தில் தொகை கிடைக்கும். குருவின் பார்வை ரோக ஸ்தானத்தில் பதிவதால் ஆரோக்கியத் தொல்லை அகலும். [illegible] சிகிச்சை செய்ய வேண்டும் என்ற நிலை மாறி, சாதாரண சிகிச்சை

இடமாற்றம், ஊர் மாற்றம், உத்தியோக மாற்றம் போன்றவை அவரவர் வாழ்க்கைத் தரத்திற்கு ஏற்ற விதம் அமையும். வரும் மாற்றங்கள் வளர்ச்சி தரக் கூடிய தாகவே இருக்கும்.

போகலாம். மாணவர்களுக்கு மறதி அதிகரிக்கும். கிரகிப்புத் திறன் கொஞ்சம் குறையலாம். பெண்கள், தங்களுடைய நெருங்கிய உறவினர்களுடன் வாக்குவாதம் ஏற்படாத வகையில் பார்த்துக் கொள்ளுங்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின்

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் பாகம் - 1 232





பிராயம் ஆகாத இளம் வாலிபர்கள் காற்றில் ஏறிச் சென்று வான முகட்டை அடைந்து விண்மீன்களை உதிர்க்கும் ஆற்றல் பெற்றிருந்தார்கள்.

இப்படிப்பட்ட வீரர்கள் இருவர் அச்சமயம் ஆதித்த கரிகாலன் ஏறிச் சென்ற ரதத்தில் அவனுடன் சம ஆசனத்தில் உட்கார்ந்திருந்தார்கள்.

இவர்களில் ஒருவர் திருக்கோவலூர் மலையமான். இவர் ஆண்ட மலையமானாடு வழக்கத்தில் பெயர் சுருங்கி 'மலாடு' என்றும் 'மிலாடு' என்றும் வழங்கியது. ஆகையால் இவருக்கு 'மிலாடுடையார்' என்ற பட்டப் பெயர் ஏற்பட்டிருந்தது.

சுந்தர சோழ சக்கரவர்த்தியின் இரண்டாவது பத்தினியாகிய வானமாதேவி இவருடைய செல்வத் திருமகள் தான். எனவே, ஆதித்த கரிகாலனுடைய பாட்டனார் இவர். முதிர்ந்த பிராயத்திலும் நிறைந்த அறிவிலும் இவர் கௌரவர்களின் பாட்டனாரான பீஷ்மரை ஒத்திருந்தார். ஆதித்த கரிகாலன் இவரிடம் பெரும் பக்தி வைத்திருந்த போதிலும் இவருடைய புத்திமதி சில சமயம் அந்த வீர இளவரசனின் பொறுமையைச் சோதித்தது.

ரதத்தில் இருந்தவர்களில் இன்னொருவன் பார்த்திபேந்திரன். இவன் பழைய பல்லவர் குலத்திலிருந்து கிளை வழி ஒன்றில் தோன்றியவன். ஆதித்தகரிகாலனை விட வயதில் சிறிது மூத்தவன். அரசுரிமை அற்றவனாதலால் போர்க்களத்தில் தன் ஆற்றலைக் காட்டி வீரப் புகழை நிலை நாட்ட விரும்பினான். ஆதித்தகரிகாலனைச் சென்றடைந்தான். வீரபாண்டியனோடு நடத்திய போரில் ஆதித்தகரிகாலனுக்கு வலது கையைப் போல இருந்து உதவி புரிந்தான். இதனால் ஆதித்தகரிகாலனுடைய அந்தரங்க நட்புக்கு உரியவனானான். வீரபாண்டியன் விழுந்த நாளிலிருந்து இருவரும் இணை பிரியாத் தோழர்கள் ஆனார்கள்.

இந்த மூவரும் ரதத்தில் சென்ற போது தஞ்சாவூரிலிருந்து பராபரியாக வந்த செய்திகளைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள்.

"இந்தப் பழுவேட்டரையர்களின் அகம்பாவத்தை இனிமேல் என்னால் ஒரு கணமும் சகித்துக் கொண்டிருக்க முடியாது. நாளுக்கு நாள் அவர்கள் வரம்பு கடந்து போகிறார்கள். நான் அனுப்பிய தூதன் பேரில் 'ஒற்றன்' என்ற குற்றம் சுமத்துவதற்கு இவர்களுக்கு எத்தனை அகந்தை இருக்க வேண்டும்? அவனைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஆயிரம் பொன் வெகுமதி கொடுப்பதாகப் பறையறைவித்தார்களாமே? இதையெல்லாம் நான் எப்படிப் பொறுக்க முடியும்? என் உறையிலுள்ள வாள் அவமானத்தில் குன்றிப் போயிருக்கிறது. நீங்களோ பொறுமை உபதேசம் செய்கிறீர்கள்!" என்றான் ஆதித்தகரிகாலன்.

"பொறுமை உபதேசம் நான் செய்யவில்லை. ஆனால் இந்த மாதிரி முக்கியமான காரியத்துக்கு வந்தியத்தேவனை அனுப்ப வேண்டாம் என்று மட்டும் அப்போதே சொன்னேன். அந்தப் பதற்றக்காரன் காரியத்தைக் கெடுத்து விடுவான் என்று எனக்குத் தெரியும். வாளை வீசவும் வேலை எறியவும் மட்டும் தெரிந்திருந்தால் போதுமா? இராஜ காரியமாகத் தூது செல்கிறவனுக்குப் புத்திக்கூர்மை இருக்க வேண்டும்" என்று கூறினான் பார்த்திபேந்திரன்.

இளவரசன் கரிகாலன் வந்தியதேவனிடம் காட்டிய அபிமானம் பார்த்திபேந்திரனுக்குப் பிடிப்பதில்லை. எப்போதும் அவனைப் பற்றி ஏதாவது குறை சொல்லிக் கொண்டிருப்பான்.

அவன் செய்யும் எந்தக் காரியத்திலும் குற்றம் கண்டுபிடிப்பான். ஆகையால் இந்தச் சந்தர்ப்பத்திலும் அவ்வாறு குற்றம் சொன்னான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பாம்பிற்கு பிராமணன் இட்ட சாபம்



ஒரு பெரிய கானகத்தில் மந்தவிஷன் என்கிற பாம்பு ஒன்று, ஒரு நாள் இரையைத் தேடிப் பார்த்தும் ஏதும் கிடைக்காதால் சோகமாக ஓர் ஏரிக்கரைக்கு அருகில் வந்து அமர்ந்தது.

அந்த ஏரியில் நிறைய தவளைகள் இருந்தன. இந்தத் தவளைகளை எப்படியாவது தந்திரமாகப் பிடித்து உண்டு விட வேண்டும் என்று திட்டமிட்டது.

அப்போது அந்தப் பக்கம் வந்த தவளையொன்று ஏன் இங்கு நின்று கொண்டிருக்கிறாய்? என்று கேட்டது. அதற்கு பாம்பு இன்று காலையில் நான் இரைதேடி செல்லும் வழியில் ஒரு தவளை குறுக்கே சென்றது. நான் அதைப் பிடிக்க சென்றேன். அப்போது ஒரு பிராமணன் மகன் புதரின் அருகில் விளையாடிக் கொண்டிருந்தான். நான் தேடிவந்த தவளை என்று நினைத்து, அந்தப் பிராமணின் பிள்ளையுடைய பாதத்தைக் கடித்து விட்டேன். அவன் இறந்து விட்டான். அதனால் கோபம் கொண்ட பிராமணன் என்னைச் சபித்து விட்டான் என்றது பாம்பு.

அந்த பிராமணன், நீ இனிமேல் தவளைகளுக்குச் சேவை செய்து வாழக் கடவாய் என்று சபித்து விட்டான். நான் இந்த ஏரிக்கரையில் உள்ள தவளைகளுக்குச் சேவகம் செய்வதற்காக் காத்துக் கொண்டிருக்கிறேன் என்று கூறியது. அந்தத் தவளை, தவளை ராஜாவிடம் கூறியது. அனைத்துத் தவளைகளும் ஏரியை விட்டு வெளியே வருமாறு உத்தரவிட்டது. ஏ பாம்பே! அனைத்துத் தவளைகளையும் உன் முதுகின் மீது ஏற்றிக் கொண்டு செல்! என்று கட்டளையிட்டது.

உடனே, பாம்பு மிகவும் பவ்வியமாக தவளைகளைத் தன் முதுகில் சுமந்து சென்றதில் பாம்பு சோர்வாகி விட்டது. தவளை ராஜா பாம்பிடம், ஏன் சோர்வாக இருக்கிறாய்? என்று விசாரித்து. எனக்கு மிகவும் பசிக்கிறது என்றது பாம்பு. இனிமேல் நீ சிறிய தவளைகளைப் பிடித்து உண்டு கொள் என்று உத்தரவிட்டது.

தவளை ராஜா கூறியதைப் போலவே அந்தப் பாம்பு சிறிய தவளைகளைச் சாப்பிட்டுக் கொண்டும் பெரிய தவளைகளைச் சுமந்து கொண்டும் காட்டில் திரிந்தது. அப்போது அந்தக் காட்டிற்குள் நுழைந்த ஒரு புதிய பாம்பு இதைப் பார்த்து ஏன் உன் முதுகில் சுமந்து கொண்டு செல்கிறாய் என்று கேட்டது. அதற்கு அந்தப் பாம்பு, எல்லாம் காரணமாகத் தான். காலம் கடந்த பின் உனக்கே தெரியும் என்றது.

சில நாட்களில் அந்தப் பாம்பு, தவளைகளை ஏமாற்றி அனைத்துத் தவளைகளையும் உண்டு விட்து. இறுதியாகத் தவளை ராஜாவையும் சாப்பிட்டு ஏப்பம் விட்டது.

நீதி: தனது புத்தியால் தன் எதிரியை அனுசரித்து செல்வது போல் அனுசரித்து சென்று புத்தியால் வெல்ல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிணற்றிலிருந்து...

பகுதியைச் சேர்ந்த தர்மலிங்கம் என்ற 3 பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

## பருத்தித்துறை...

பருத்தித்துறை பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு நேரடியாக சென்ற பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் கிருசாந்தன் பொன்னுத்துரை சடலத்தை பார்வையிட்டதுடன் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ம-7,60)

## 13ஆவது திருத்...

கிழக்கு சிவில் சமூக பிரதிநிதிகள் யாழ்.இந்தியத் துணைத் தூதுவரிடம் கடிதம் ஒன்றினை கையளித்துள்ளனர்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கான குறித்த கடிதம் யாழ்.இந்திய துணைத் தூதரகத்தில் நேற்று கையளிக்கப்பட்டது.

கடிதத்தை கையளித்த பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை,

13ஆவது திருத்த சட்டம் குறித்தும் அதனால், வந்த மாகாண சபை கட்டமைப்பினை முழுமையாக அமுல்படுத்துமாறும் கடிதம் ஒன்றினை கையளித்துள்ளோம்.

அவர்கள் அதை டெல்லிக்கு அனுப்பி ஒரு சாதகமான பதிலை தருவார்கள் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். முடிந்த வரையில் 13-ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கோரி இந்த கடிதத்தினை அனுப்பி இருக்கின்றோம்.

36 வருடங்கள் இந்த அரசியல்வாதிகள் 13ஐ நடைமுறைப்படுத்துவதற்குரிய நடைமுறை சாத்தியமான விடயங்கள் எதனையும் முன்னெடுக்கவில்லை.

குறிப்பாக இணைந்த வட கிழக்கில் அமைந்த மாகாண சபையில் ஒன்றரை வருடங்கள் மாத்திரமே மக்கள் பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

பிரிந்த வடக்கு மாகாணமும் ஐந்து வருடம் மாத்திரம் செயற்பாட்டில் இருந்தது. அந்த காலத்திலும் அது சரியான முறையில் செயற்படுத்தப்படவில்லை. அதிகாரங்களில் சில தடைகள் இருந்தாலும் சரியான முறையில் அமுல்படுத்தப்படவில்லை என்ற கவலை நமக்கு உள்ளது என்றார். (ம-7,33,104)

## சைவ வழிபாட்டு...

பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர்களான அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன், இரத்தினம் ஜெகதீசன், ஊடகவியலாளர் விஜயரத்தினம் சரவணன் ஆகியோரால் வவுனியாவில் அமைந்துள்ள மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்தியக் காரியாலயத்தில் மேற்கொள்ளப்பட்டது.

குறிப்பாக குருந்தூர்மலையில் கடந்த 14ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று, பிரதோச தினத்தில் சைவத் தமிழ் மக்கள் சிலர் விசேட பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்ளச் சென்றபோது பெரும்பான்மை இனத்தவர்களாலும் மற்றும் பௌத்த துறவிகளாலும் குழப்பம் விளைவிக்கப்பட்டதுடன் பொங்கலுக்காக அங்கு தீ மூட்டப்பட்டபோது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவராலும், பெரும்பான்மை இனத்தவர் ஒருவராலும் சப்பாத்துக்கால்களால் மிதிக்கப்பட்டு அணைக்கப்பட்டது.

அத்தோடு வழிபாடுகளை மேற்கொள்ள வருகைதந்த சைவத்தமிழ் மக்களும் மக்கள் பிரதிநிதிகள் சிலரும் சமூக செயற்பாட்டாளர்களும் பொலிஸாரால் தாக்கப்பட்டும் இருந்தனர்.

இந்நிலையில் குறித்த இடத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அங்கு சைவழிபாட்டுரிமையினைத் தடுக்கும் வகையில் செயற்பட்ட பௌத்த தேரர்களுக்கும் பெரும்பான்மை இனத்தவர்களுக்கும் ஆதரவாகச் செயற்பட்டிருந்ததுடன், சைவ வழிபாட்டு உரிமைகளைத் தடுக்கின்ற செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருந்தனர்.

அத்தோடு குறித்த நாளில் குருந்தூர்மலையில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர் விஜயரத்தினம் சரவணன் பொலிஸாரால் தள்ளிவிடப்பட்டு அச்சுறுத்தலுக்குள்ளாகியிருந்தார்.

குறிப்பாக சைவ வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டமை மற்றும் ஊடக அடக்குமுறை என்பவற்றில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும், பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு எதிராகவே இவ்வாறு மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## 29 ஆயிரம்...

வெலிய மற்றும் தொல்லியல் திணைக்களம் முல்லைத்தீவு மக்களுக்குச் சொந்தமான சுமார் 100,000 ஏக்கர் காணிகளை ஆக்கிரமித்துள்ளதாக மாகாண கிராம அதிகாரிகள் மற்றும் மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பான அறிக்கையை ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி வைத்த பின்னர் அந்த காணிகளை விடுவிப்பதற்கான உத்தரவு கிடைத்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரடியன்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு மற்றும் வெலிஓயா ஆகிய மாகாணங்களின் காணிகளே இவ்வாறு விடுவிக்கப்பட உள்ளன.

விடுவிக்கப்படவுள்ள 29,000 ஏக்கர் காணிக்கு மேலதிகமாக மேலும் 17,000 ஏக்கர் காணியில் விவசாயம் செய்வதற்கு வன பாதுகாப்பு அதிகாரிகளால் தடை விதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மக்கள் ஜனாதிபதியின் செயலாளர் தலைமையிலான தேசிய கொள்கை வகுக்கும் குழுவிடம் மனுவொன்றை சமர்ப்பித்துள்ளனர். (ம-7)

## சமஷ்டி...

இலங்கை தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கல நாதன், புளொட்டின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக டுவிட்டரில் பதிவிட்டுள்ள அமெரிக்க தூதுவர் ஜூலி சங்; அதிகாரப் பகிர்வின் முக்கியத்துவம், காணி விடுவிப்பு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான பதிலை கண்டறிதல், மனித புதைகுழி தொடர்பான விசாரணைகள், உண்மை, நல்லிணக்கம் மற்றும் நீடித்த அமைதிக்கான இலங்கையின் முயற்சிகள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக கூறியுள்ளார்.

கொக்குத்தொடுவாய் பகுதியில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி தொடர்பான விசாரணைகள் நியாயமான முறையில் நடைபெறுவது தொடர்பான கரிசனையை அனைவரும் முன்வைத்ததாகவும் சி.வி.விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

Lucky 7 — திகதி 17.07.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0004 — L7 இலக்கம் 3 6 — வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 3 7 7 7 4 3

தன நிதானய — திகதி - 2023.07.17 — சீட்டிழுப்பு இலக்கம் - 1208 — X 10 25 54 75 X

கொவிசெத — திகதி 2023.07.17 — சீட்டிழுப்பு இலக்கம் 3420 — ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 19 42 68 71 — தேசிய லொத்தர் சபை

மெகா பவர் — திகதி 17/07/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1526 — Y 03 11 16 28 41

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2023.07.17 — சீட்டிழுப்பு இலக்கம் 487 — தனுசு 09 13 23 54 தனுசு

மஹஜன சம்பத — திகதி 2023/07/17 — சீட்டிழுப்பு இலக்கம் 5178 — V 4 9 8 2 6 8 — தேசிய லொத்தர் சபை

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2152 — வர்ணம் ஊதா — சீட்டிழுப்பு திகதி 2023.07.17 — தினம் திங்கட்கிழமை — 23 57 71 74 I — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,738,380.40 — "இரண்டாம் வரம்" 13 14 62 68 A — DLB

சனிதா — திகதி 2023.07.17 — வெற்றி வாரம் 4313 — 01 19 30 31 V — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,328,660.00 — "இரண்டாம் வரம்" 25 61 62 63 F — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 3864 — வர்ணம் மஞ்சள் — சீட்டிழுப்பு திகதி 2023.07.17 — தினம் திங்கட்கிழமை — 03 15 35 38 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,790,540/- — "இரண்டாம் வரம்" 11 22 44 47 — DLB

கப்ருக — திகதி 17.07.2023 — வெற்றி வாரம் 1328 — வர்ணம் பச்சை — H 28 13 47 57 71 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 417,822,174.20 — கப்ருக "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 21 52 53 58 P — DLB தொலைபேசி 011-2 333 346-47 Web : www.dlb.lk

ஜயோதா — திகதி 2023.07.17 — வெற்றி வாரம் 1939 — வர்ணம் செம்மஞ்சள் — 08 11 39 47 F — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.44,879,955.20 — "இரண்டாம் வரம்" 45 46 51 64 S — DLB

அத கோடிபதி ADA KOTIPATHI — திங்கட்கிழமை — வெற்றி வாரம் : 1978 — வர்ணம் : சிவப்பு — சீட்டிழுப்பு திகதி : 2023.07.17 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,135,270/- — 15 18 54 63 P — "இரண்டாம் வரம்" 33 36 55 74 R — DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி பல்பொருள் விற்பனை நிலையத்தில் தீ பரவல்



கிளிநொச்சி வர்த்தக நிலையம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் பல்பொருள் விற்பனை பொருட்கள் தீக்கிரையாகியுள்ளது. குறித்த தீ விபத்து நேற்று இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் கரைச்சி பிரதேச சபையின் தீ விபத்து பாதுகாப்பு பிரிவுக்குத் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த தீ விபத்து கட்டுப்பாட்டு பிரிவினர் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

கிளிநொச்சி டிப்போ வீதியில் அமைந்துள்ள பிரபல தனியார் பல்பொருள் விற்பனை நிலையத்தின் களஞ்சிய பகுதியிலேயே குறித்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் ஏற்பட்ட சேத விபரம் தொடர்பில் தகவல் ஏதும் வெளியாகவில்லை. மேலும், தீ விபத்துக்கான காரணம் தொடர்பிலும் ஆராயப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் கிளிநொச்சி பொலிஸார் சம்பவம் தொர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## கடன் மறு...

தின் கடன் திட்டத்துடன் தொடர்புடைய மதிப்பாய்வுகளை சரியான முறையில் இலங்கை மற்றும் கானாவுக்கு முன்னெடுக்க முடியும்என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் ஆரம்பமாகியுள்ள, ஜி-20 உச்சி மாநாட்டிற்கு முன்னதாக நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

கடன்களை பெற்றுக்கொண்ட நாடுகள் மற்றும் பிற பங்குதாரர்களுக்கு செயல்முறை பற்றிய தெளிவை வழங்க, கடன் மறுசீரமைப்பு பயனர் வழிகாட்டி அவசியம் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் உலகின் ஏழ்மையான நாடுகளுக்கு பூச்சிய வட்டிக் கடன்களை வழங்குவதாகவும் அது உறுதியான நிதி நிலைப்பாட்டில் வைக்கப்பட வேண்டும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

உள்நாட்டு நிதி ஆதாரங்களைப் பயன்படுத்துவது உள்ளிட்ட பல நிதி தொடர்பான ஆலோசனைகளை வழங்க சர்வதேச நாணய நிதியம் உதவ வேண்டும் என அவற்றுக்கு உதவ அமெரிக்க திறைசேரி தயாராக உள்ளதாக அமெரிக்க திறைசேரி செயலாளர் ஜெனட் யெலன் தெரிவித்துள்ளார். (ம-7)

# ஜனநாயகத்தை அழிக்கும் அரசின் கூட்டுச் சதியை முறியடிப்போம்

## எதிர்க் கட்சித்தலைவர் சஜித்



(கொழும்பு)

ஜனநாயகத்தை அழிக்க இந்த அரசாங்கம் எடுக்கும் கூட்டுச் சதி முயற்சிகள் சகலதையும் முறியடிக்க நடவடிக்கை எடுப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக எதிர்க் கட்சித் தலைவர் நேற்று விடுத்துள்ள விசேட காணொலியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், உண்மையில், இந்த அரசாங்கம் அதன் நடவடிக்கைகளின் மூலம் மக்களின் இறையாண்மை சர்வஜன வாக்குரிமை என்பன மக்களுக்கு மறுக்கப்பட்டு, அழிக்கப்பட்டு வருகின்றன.

பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறல் என்ற தொனிப்பொருளில் அரசாங்கம், நீதிமன்றத்திற்கும் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும் அழுத்தம் கொடுக்கும் நடவடிக்கைகளை எதிர்ப்போம்.

அத்துடன், நீதித்துறையின் சுதந்திரத்தை இல்லாதொழிக்க இடமளிக்க மாட்டோம். சுதந்திரமான மற்றும் பாரபட்சமற்ற தேர்தல் ஆணைக்குழு மீது செல்வாக்கு செலுத்த இடமளிக்க மாட்டோம்.

எதிர்க்கட்சியின் சகல தரப்புகளையும் ஒன்றாய் இணைத்துக் கொண்டு 220 இலட்சம் மக்களின் நலனுக்காக நீதித்துறையின் சுதந்திரத்தையும் தேர்தல் ஆணைக்குழுவின் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தை வலுப்படுத்த செயற்படுவோம்.

ஜனநாயகத்தை அழிக்க இந்த அரசாங்கம் எடுக்கும் கூட்டுச்சதி முயற்சிகள் சகலதையும் முறியடிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார். (ம-7)

## திருமண...

துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், தெல்லிப்பழை - மாவை கலட்டி, கொல்லங் கலட்டி பகுதியைச் சேர்ந்த சுகிர்தராசா நிதர்சினி (வயது 27) என்ற இளம் குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார். காய்ச்சலால் பீடிக்கப்பட்ட குறித்த பெண்ணுக்கு நேற்று முன்தினம் வலிப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் அவர் நேற்று முன்தினம் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் அவர் நேற்றைய தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அவரது சடலமானது பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. சடலத்தின் மீதான பிரேத பரிசோதனைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,33,104)

## யாழ்.நாவா...

மான சூழல் ஏற்பட்டது.

இந்நிலையில் சிலர் காயமடைந்துள்ளதுடன் அப்பகுதியில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டு நிலைமைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் ஏற்பட்ட முறுகல் நிலையின் தொடர்ச்சியாகவே நேற்று வன்முறை உருவானதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் பிரதேச செயலருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில், சம்பவ இடத்தில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் களமிறக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

எனினும் குறித்த பகுதியில் பொதுப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதோடு போத்தல்கள் உடைக்கப்பட்டு பொதுமக்கள் வீதியில் பயணிக்க முடியாதவாறு பதற்ற நிலைநிலவுகின்றது. (ம-7,33,104)

# சவுக்கு வெட்டிய 6 பேர் மணற்காட்டில் கைது

வடமராட்சி மணற்காட்டில் சவுக்குமரங்களை சட்டவிரோதமான முறையில் வெட்டிய 6 பேரை யாழ்.மாவட்ட வனவள பாதுகாப்பு திணைக்களத்தினர் நேற்று கைது செய்துள்ளனர்

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, மணற்காட்டு பகுதியில் சவுக்குமரங்கள் வெட்டப்படுவதாக யாழ் மாவட்ட வனவள பாதுகாப்பு திணைக்களத்தினருக்கு கிடைத்த தகவலுக்கமைய சம்பவ இடத்திற்கு விரைந்த வனவள பாதுகாப்பு திணைக்களத்தினர் மற்றும் விசேட அதிரப்படையினர் ஆறு பேரை கைது செய்து வழக்கு தாக்கல் செய்தனர்.

இதனையடுத்து வெட்டப்பட்ட சவுக்குமர குற்றிகளுடன் துவிச்சக்கர வண்டிகளையும் கைப்பற்றிய நிலையில் சிலர் தப்பிசென்றுள்ளனர்.

இந்நிலையில் தப்பிசென்றோரை வனவள பாதுகாப்பு திணைக்களத்தினர் தேடி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16288)
076 825 7716 (ஆகாஸ்)

யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
பழைய மாணவர் சங்கம்-யாழ்ப்பாணம்
பழைய மாணவர்களுக்கான முக்கிய அறிவித்தல்
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பெயரில் கடந்த 11.07.2023 ஆம் திகதி பத்திரிகையில் 'பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் 2023/2024' என்று பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்திற்கும் எமது சங்கத்திற்கும் எந்த வித தொடர்புமில்லை என்பதனை பழைய மாணவர்களுக்கு அறியத்தருகிறோம்.
எமது பழைய மாணவர் சங்கத்தின் 2023/2024 காலப் பகுதிக்கான தலைவராக திரு.கு.விக்னேஷ் அவர்களே தெரிவு செய்யப்பட்டு, சங்கத்தின் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறார் என்பதனையும் தங்களுக்கு அறியத்தருகிறோம்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
(16323)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

WORK IN CANADA
WORK PERMITS
COMPUTER TECHNICIANS
COMPUTER சம்பந்தமான DEGREE ,DIPLOMA படித்தவர்களுக்கும் COMPUTER HARDWARE, NETWORKING துறைகளில் வேலை அனுபவம் உள்ளவர்களுக்கும் பொருத்தமான வேலை வாய்ப்புக்கள்
✓ 2 YEAR WORK PERMITS (C-6933)
✓ குடும்பத்தவர்களை உடன் அழைத்துச்செல்லும் வாய்ப்பு
✓ 2 வருடத்தின் பின் நிரந்தர வதிவிடவுரிமை (Permanent Resident)
CIMS COLLEGE 0777-068-777

WORK IN UK
WORK PERMITS
CIVIL ENGINEERS
CIVIL ENGINEERING சம்பந்தமான DEGREE ,DIPLOMA படித்து CIVIL ENGINEERING துறைகளில் வேலைசெய்பவர்களுக்கு பொருத்தமான வேலை வாய்ப்புக்கள்
✓ 5 YEAR WORK PERMITS (C-6933)
✓ குடும்பத்தவர்களை உடன் அழைத்துச்செல்லும் வாய்ப்பு
✓ 5 வருடங்களின் பின் நிரந்தர வதிவிடவுரிமை (Permanent Resident)
CIMS COLLEGE 0777-068-777

பணிப்பெண் தேவை
யாழ்ப்பாணம் அளவெட்டிப் பகுதியில் குழந்தை ஒன்றை பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை (16324)
Full time work Salary-60,000/-
077 784 2885

கடை வாடகைக்கு
யாழ்.நகரில் கடை வாடகைக்கு உண்டு (16318)
077 494 3266
077 936 3051

VILLAGE HOTEL
JAFFNA EXPRESS
யாழ் - கொழும்பு பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...
கட்டணம் - 2800/=
(16033)
T.P:077 544 8503

சங்கீத அறிமுறை வகுப்புக்கள்
கல்விப் பொது சாதாரண வகுப்பு மற்றும் கல்விப் பொது உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கர்நாடக சங்கீத பாடத்திற்குரிய அறிமுறை வகுப்புக்கள் நடைபெறுகின்றன (16277)
இல.30, கிருஷ்ணபிள்ளை வீதி, சுச்சமோட்டை, யாழ்ப்பாணம்
077 481 9795

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.181, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org